வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 314 | பக்கங்கள் : 16




# சசிகலாவுக்கு எதிராக யாழில் விஷம பிரசாரம்

## தமிழ் அரசில் போட்டியென சுவரொட்டி




தென்மராட்சி, நவம்பர் 10

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜ், இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுகிறார் என்று குழப்பம் ஏற்படும் விதமாக யாழ்ப்பாணத்தில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 15

# நாசகார குடும்பத்துக்கு அதிகாரம் மாற்றப்படாது

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

"இந்த நாட்டு மக்கள் செப்ரெம்பர் 21 அன்று ஊழல் மற்றும் நாசகார குடும்பங்கள் அனைத்தையும் தோற்கடித்து சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை மாற்றினர்.

மீண்டும் அவர்களின் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்"- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்குவதன் ஊடாக இந்த நாட்டில் வறுமையை இல்லாதொழிக்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார கூறினார்.

குருநாகலில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "ஜனாதிபதித் தேர்தலில் தந்தையிடமிருந்து மகனுக்கு அதிகாரம் செல்லும் என எதிர்பார்க்கப் பட்டது. 15

# தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு மாத்திரமே வாக்களியுங்கள்!

## தமிழ் சிவில் சமூக அமையம்

யாழ்ப்பாணம், நவ. 10

தமிழ் மக்கள் சிங்கள தேசிய கட்சிகளையும் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் நிராகரிக்க வேண்டும். தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் சிவில் அமையம் தெரிவித்துள்ளது. 15

# தமிழ் அரசு தலைவராக நான் பொறுப்பேற்பேன்

## சொல்கிறார் சிறீதரன்

யாழ்ப்பாணம், நவ. 10

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக பொறுப்பேற்பேன் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். அதற்கான ஆணையை மக்கள் வழங்க வேண்டும் என்றும் இப்போது நீதிபதி மக்களாகிய நீங்களே என்றும் அவர் கூறினார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# அறுகம்குடாவில் தாக்குதல் திட்டம் தீட்டியது ஈரானா?

## அமெரிக்கா அதிர்ச்சி தகவல்

கொழும்பு, நவ. 10

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் டொனால்ட் ட்ரம்ப் மீது தாக்குதலை நடத்துவதற்கு திட்டங்களை தீட்டிய நபரிடம் ஒக்ரோபர் மாதம் இலங்கை அறுகம்குடாவில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளும் திட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருந்தது என அமெரிக்க நீதி திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஈரான் இராணுவத்தின் இஸ்லாமிய புரட்சிகர 15




# சுற்றுலாத்துறை மூலம் வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, நவ.10

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த நாட்டில் பெறப்படும் வெளிநாட்டுப் பணப் பரிவர்த்தனைகளின் அளவும், சுற்றுலாத்துறையின் வருமானமும் அதிகரித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 15







# மண்வெட்டியால் தாக்கி குடும்பப்பெண் கொலை

## இளைஞன் தலைமறைவு

வவுனியா, நவ. 10

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் மண்வெட்டியால் தாக்கி குடும்பப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை ஈச்சங்குளம் அம்மிவைத்தான் பகுதியிலுள்ள தனது வீட்டில் குறித்த பெண் தனிமையில் இருந்துள்ளார். இதன் போது அங்கு அத்துமீறி வந்த இளைஞன் ஒருவர் குறித்த பெண்மீது மண்வெட்டியை கொண்டு தாக்கியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனையில் தெரிவிக்கப் பட்டது.

இச்சம்பவத்தில் ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த வெற்றிமலர் (வயது - 57) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் 15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் திண்ம கழிவகற்றல் ரூ. 353 கோடி கொரியா உதவி!

கொழும்பு, நவ. 09

வடக்கு, ஊவா மாகாணங்களில் திண்ம கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்த தென்கொரிய அரசாங்கம் 10.20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 353 கோடி ரூபாய்) நிதியை வழங்கியுள்ளது.

2024 - 2028 காலகட்டத்தில் உள்ளூராட்சி மட்டத்தில் திண்மக்கழிவு மேலாண்மை பொறிமுறையை நிறுவும் மறைமுக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஐ)

# கடத்தல் சந்தேகநபரின் சிறை கூண்டிலிருந்து கைபேசி மீட்பு

கொழும்பு, நவ. 10

பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பல் ஒன்றின் தலைவரான பொடி லெசி என்று அறியப்பட்ட ஜனித் மதுசங்கவின் கூண்டிலிருந்து கைபேசி உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட விசேட தேடுதலிலேயே இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சிறையில், மிகவும் சூட்சுமமான முறையில் கைபேசி, அதற்கான சிம் அட்டை, சார்ஜர் மற்றும் டேட்டா கேபிள், ஹெட்செற் உள்ளிட்ட பல கைபேசி சாதனங்கள் இதன்போது கைப்பற்றப்பட்டன என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ஐ)

# வரணி நூலகத்தின் பரிசளிப்பு விழா!

தென்மராட்சி, நவ. 10

சாவகச்சேரி பிரதேச சபை வரணி நூலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று சனிக்கிழமை நடை பெற்றது.

வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், ஹரி குழும நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சோமசுந்தரம் யாதவன், பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அத்துடன், வரணி மத்திய கல்லூரி பிரதி அதிபர் தெ.செந்தூரன் அவர்களும், கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் ம. தீபா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து, போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் வீட்டு நூலகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# ரூ. 8 இலட்சம் பெறுமதியான கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது!

மன்னார், நவ. 10

மன்னாரில் சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் இந்தக் கைது இடம்பெற்றது.

இராணுவ புலனாய்வு பிரிவினர், திருகோணமைலை பொலிஸ் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் கடத்தி வந்த கஞ்சாவை வேறொரு நபருக்கு விற்பனை செய்வதற்காக காத்திருந்தபோதே கைது செய்யப்பட்டார். கைதான நபர் மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ்ப்பாண இளைஞர் கைது!

கொழும்பு, நவ. 10

போலி நுழைவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸுக்கு செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 23 வயது நபராவார்.

கைதான இளைஞன் நேற்று முன்தினம் இரவு 08.35 மணியளவில் சென்னையை நோக்கிச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயண பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலியாக தயாரிக்கப்பட்ட பிரான்ஸ் நுழைவுச்சீட்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான இளைஞன் இந்த போலி நுழைவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸுக்கு தப்பிச் செல்ல தயாராக இருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது. கைதான இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக குற்ற புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)




# தேசியப் பட்டியல் மூலம் எம். பியாகவே மாட்டேன்!

## சுமந்திரன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ. 10

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்தால் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு செல்லவே மாட்டேன் என்று கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் எம். ஏ. சுமந்திரன்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லை என்பதனால் வேறு கட்சிகளிலும் சுயேச்சைகளிலும் போட்டியிடுபவர்களாலேயே தமிழ் அரசுமீது அதிக மான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இதேநேரம், அநுராகுமார திஸநாயக்காவின் கட்சியை பொறுத்தமட்டில் ஊழலற்ற ஆட்சி, நேர்மையான நிர்வாகம் தொடர்பில் தமிழர்களிடம் ஒரு நம்பிக்கையான எதிர்பார்ப்பு இருக்கலாம். ஆனால், தமிழர்களின் சுயாட்சி கோரிக்கையில் அவர்களுக்கு முழுமையான ஈடுபாடு கிடையாது. நாட்டில் எல்லோரும் சமமாக பேணப்பட்டால் - நாட்டில் பொருளாதார பிரச்னை தீர்ந்தால் - எல்லா பிரச்னைகளும் தீரும் என அவர்கள் எண்ணுகின்றார்கள்.

தமிழர்கள் தனியான ஒரு மக்கள் குழாம், அவர்கள் தனியான தேசம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களிடம் பிற நல்ல விடயங்கள் இருக்கலாம். ஆனால், எங்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் தொடர்பில் இணங்காதவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவேதான் பாராளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களியுங்கள் எனக் கோருகின்றோம்." - என்றார். (ஐ)

# அராலி இந்துவில் பரிசளிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 10

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவானது நேற்று முன்தினம்வெகு சிறப்பாக நடைபெற்றது.

மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, மங்கல விளக் கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் மற்றும் பரிசில்கள் வழங்கும் வைபவம் என்பன நடை பெற்றன.

கல்லூரி முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்ட கல் விப் பணிப்பாளர் சூ. நொபேட் உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்டப் பணிப்பாளர் எக்ஸ். அஞ்சலிற்ரோ மற்றும் பாரி அறக்கட்டளையின் தலைவர் ச.நிகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்துக்கு முன்னுரிமை கோரி சிவசேனை தேர்தலில் போட்டி!



யாழ்ப்பாணம், நவ. 09

சைவ சமயத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை கோரி சிவ சேனை தொண்டர்கள் சுயேச்சை குழுவாக களமிறங்கியுள்ளனர் என்று ஈழம் சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், வரலாற்று தொன்மையான சைவ சமயத்துக்கு முன்னுரிமை அளிக்காமல் பௌத்த சமயத்துக்கு எவ்வாறு முன்னுரிமை அளிக்கலாம். மதமே இந்த நாட்டை கெடுக்கிறது. பௌத்த மதத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்காமல் சைவ சமயத்துக்கும் முன்னுரிமை அளிக்கவேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும்

## கமலரூபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

சலுகையாகவும், இனவாதமாகவும் உள்ள அரசியல் கலாசாரம் மாற்றப்பட்டு, புதிய அரசியல் கலாசாரம் உருவாக வேண்டும் என்று சுயேச்சை வேட்பாளர் ஈ. எஸ். பி. கமலரூபன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் நிலைப்பாடு இனவாதம் சலுகை அரசியலாக உள்ளது. தேசிய கட்சிகளாக இருந்தாலும் சரி தமிழ்த் தேசிய கட்சிகளாக இருந்தாலும் சரி அதனையே முன்னெடுக்கின்றன.

இந்த அரசியல் கலாசாரம் மாறவேண்டும். அரசியல் மக்கள் மயப்படுத்த வேண்டும். அரசியல் தலைவர்கள் மக்களை அரசியல் மையப்படுத்தவில்லை. தமிழ் மக்கள் இனவாத, சலுகை அரசியலில் இருந்து இம்முறை வெளியே வந்து மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் - என்றார். (ஐ)

# தமிழினத்தின் விடுதலைக்காக மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன்



வவுனியா, நவ. 10

**எமது மக்கள் பல இழப்புகளை தாண்டிவந்துள்ளனர். எனவே, இனத்தின் விடுதலைக்காக மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் - இவ்வாறு கூறியுள் ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன்.**

நேற்றைய தினம் வைரவ புளியங்குளத்தில் பிரசாரத்தை ஆரம்பித்தார். இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இந்த அரசாங்கம் தங்களது சுயரூபத்தை படிப் படியாக வெளிப்படுத்தி வருகின்றது. முதலில் ஐ. நா. தீர்மானத்தை ஏற்க முடியாது என்றார்கள். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட் டோம் என்றார்கள். இன்று சமஷ்டிக்கு எதிராகப் பேசுகின்றனர்.

இடதுசாரி கொள்கை கொண்ட கட்சி என்று தங்களைக் கூறிக் கொண்டு சிங்கள தேசியவாத கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு நிலையே அவர்களிடம் உள்ளது. எமது மக்கள் பல இழப்புகளை தாண்டிவந்துள்ளனர். எனவே, இனத்தின் விடுதலைக்காக மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்குவாக்களிக்க வண்டும் - என்றார்.

இந்தப் பிரசார நடவடிக்கையின்போது கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ- 10)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024
ஊஞ்சல் சின்னம்
X 4
சுயேச்சைக் குழு - 2
நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!



E.S.P. நாகரத்தினம்
கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

இரண்டு ஆண்டு கால செயல்திட்டம்
• எமது தமிழர் பரப்பான சுயத்திலும் புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
• யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுகளின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத்தீர்மானத்தை நிறைவேற்றுதல்.
• இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டம்.
• அறிவோம் ஆழ்வோம் செயல்திட்டம்.
• போக்குவரத்து மேம்பாட்டுத்திட்டம்.

2030ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்
• தமிழர் தரப்பில் பலமான கட்டமைப்பை உருவாக்கி நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள்.
• விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயல்திட்ட முன்மொழிவுகள்.
• 2050ஆம் ஆண்டை நோக்கிய கிராமங்களின் எழுச்சியையும் நகரத்தை நவீனமயப்படுத்துவதற்கான செயல்திட்ட முன்மொழிவுகள்.


2050ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்
• விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவடைதல்.
• இளைஞர்களின் இருப்பை பலப்படுத்தி ஒரு சமூக, பொருளாதார கட்டமைப்பை உருவாக்குதல்.
• வளமான அமைதியான தேசம் என்ற உயர்நிலையை எட்டுதல்.

"எமது இரண்டு வருட கால செயல்திட்ட முன்னேற்றங்களையும், 2030 மற்றும் 2050 ஆண்டுகளை நோக்கிய செயல்திட்ட முன்மொழிவுகளையும் 2026ஆம் ஆண்டு பொது மாநாட்டில் வெளியிடல்!"

"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன்!
எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்.

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தேசியம் - சூழலியம் - சுயநிர்ணயம்
அரசியலில் தமிழ்த் தேசியச் செழுமை!
அபிவிருத்தியில் நிலைபேறான முழுமை!
சுற்றுச்சூழலில் காணுமிடமெல்லாம் பசுமை!
01





நா.பார்த்தீபன்
கூட்டுறவாளர்
06
தமிழ்த் தேசிய அரசியலில் ஒலிக்கும்
ஒரேயொரு பசுமைக்குரல்
பொ.ஐங்கரநேசன் M.Sc, PGDJMC
சுயேச்சைக் குழு - 14
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள கட்சிகளுக்கு தமிழர்கள் நேரடியாக வாக்களிக்க வேண்டாம்!

## மணிவண்ணன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், நவ. 10

தேசிய மக்கள் சக்தியின் மனதில் மாற்றங்கள் ஏற்பட்டு, தமிழர் நலன்சார்ந்து செயல்படுவார்களெனில் அவர்களுக்கு தமிழ் கட்சிகள் ஆதரவளிக்கும். அதற்காக தமிழ் மக்கள் நேரடியாக சிங்கள கட்சிகளுக்கு வாக்களிக்க தேவையில்லை. இதனை நான் இனவாதியாகக் கூறவில்லை. ஓர் இனப்பற்றாளனான தமிழ் மக்களிடம் கோருகிறேன் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணிக்கான ஆதரவுத் தளம் பெருகி வருகிறது. இதனை பொறுத்துக்கொள்ள முடியாத மற்றைய கட்சிகள் எமக்கு எதிராக கீழ்த்தரமான வேலைகளை செய்ய தொடங்கியுள்ளன.

போலி முகநூல்களில் பொய்யான தகவல்களை பரப்புதல், எமக்கு எதிரான போலி பிரசாரங்களை முன்னெடுத்தல் போன்றவற்றை செய்ய தொடங்கியுள்ளனர். தேர்தல் பரப்புரை காலம் முடிவடையவுள்ள நிலையில் எமக்கு எதிரான கருத்துகளை பரப்ப, அரச இயந்திரங்களுடன் சேர்ந்து திட்டமிட்டுள்ளனர் என்று அறிகிறோம்.

எனவே தமிழ் மக்கள் அவர்களின் போலி பிரசாரங்களை நம்பாது விழிப்புடன் இருக்க வேண்டும். ஏதேனும் தகவல்கள், விவரங்கள் விளக்கங்கள் தேவையெனில் எம்மை அணுகி அவற்றை தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

மக்கள் மாற்றத்துக்குத் தயாராகி விட்டனர். புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என விரும்புகின்றனர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்தவர்கள் மீண்டும் தமக்கு கால நீடிப்பு கோரி தமிழ் மக்கள் ஆணையை கேட்டு நிற்கின்றனர். அவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும்

தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க முடியாதவர்கள். தற்போது அபிவிருத்தி , வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்து உள்ளவர்களை இலக்கு வைத்து தாம் அமைச்சு பதவியை ஏற்பது தொடர்பாக சிந்திக்கின்றோம் என்று கூறி அவர்களின் வாக்குகளை பெற முனைகின்றார்கள். இதற்கு தமிழ் மக்கள் இடமளிக்ககூடாது தமிழ் அரசு கட்சி உள்ளிட்டவைகளுக்கு அளிக்கும் வாக்கு வீணானதே. இம்முறை தமிழ் மக்கள் இளையோரான எம்மை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

# மக்களை ஏமாற்றுகிறார் அநுர

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நாட்டு மக்களுக்கு பல நம்பிக்கைகளை வழங்கி இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை தினந்தோறும் ஏமாற்றி வருகின் றார் - என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், பொருட்களின் விலைகள், உணவு, பானங்களின் விலைகள், எரிபொருள் விலை, மின்சார கட்டணம், வரிகள் குறைப்பு, அரச சேவையாளர்களின் சம்பளத்தை ஒவ்வொரு 6 மாதங்களும் ஒரு தடவை அதிகரிப்பேன் என பல வாக்குறுதிகளை வழங்கினார். என்றாலும் மக்களின் எதிர்பார்ப்பு நொடிக்கு நொடி புஸ்வா ணம் ஆகியுள்ளது - என் றார்.

மேலும், இவ்வாறான பிரச் னைகளுக்கு மத்தியில் அவர் தரப்பு உறுப்பினர்களால் பாரா ளுமன்றத்தை நிரப்புமாறு மக்க ளிடம் கோரிக்கை விடுக்கிறார். அவர்களால் இந்த பிரச்னை களுக்கு தீர்வுகளை வழங்க முடியாது. பிரச்னைகள் மேலும் அதிகரிக்கும். மக்களின் வாழ் வாதாரத்தை பலப்படுத்த ஐக் கிய மக்கள் சக்தியால் மாத்திரமே முடியும் - என்றார். (ஐ)

# ஈ.பி.டி.பிக்கு 4 எம்.பிக்களை தமிழ் மக்கள் தரவேண்டும்!

## கேட்கிறார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், நவ. 10

ஈ. பி. டி. பி.க்கு மூன்று அல்லது நான்கு எம். பிக்களை தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் தர வேண்டும் என்று குருநகரில் நடந்த மக்கள் சந்திப்பில் அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

குருநகரில் நடத்திய மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், "நான் உசுப்பேற்றல்களால் ஆயுதப் போராளியாகவோ, பாராளுமன்ற ஜனநாயகத்துக்கோ வந்தவன் அல்ல. தமிழ் மக்கள் மீதிருந்த உணர்வுகளால் வந்தவன். மக்கள் மீதான எனக்குள்ள உணர்வுகளே இன்றுவரை பாராளுமன்றில் என்னை பிரதிநிதியாகவும் வைத்திருக்கிறது.

"இம்முறையும் மக்கள் என்னை வெற்றிபெறச் செய்வார்கள். அதில் எவ்வித சந்தேகமும் இருக்கப் போவதில்லை. இதேநேரம் நான் தமிழ் மக்களாகிய உங்களிடம், என்னுடன் ஈ. பி. டி. பியிலிருந்து மேலும் மூன்று அல்லது நான்கு உறுப்பினர்களை பாராளுமன்றம் செல்வதற்கான அங்கீகாரத்தை தாருங்கள் என்றே கேட்கிறேன். இதனை மக்கள் செய்தால், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வுகளை பெற்றுததர எம்மால் முடியும் என்று உறுதியாக நம்புகிறேன் - என்றார். (ஐ-05)

# நாம் மக்களுக்கு பொய் கூறவில்லை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

நாம் மக்களுக்கு எவ்வித பொய்களையும் கூறவில்லை என ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வென்னப்புவவில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்


மேலும், பொய் பரப்புரை செய்து ஆட்சியை கைப்பற்றியதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர். எனினும், நாம் எவ்வித பொய்களையும் மக்களிடம் கூறவில்லை

அவ்வாறு ஏதேனும் பொய்யுரைத்திருந்தால் அதனை வெளிப்படுத்துமாறு சவால் விடுப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

உங்களுக்காக உங்களுடன் நானும் ஒருவனாய்...

சிறந்ததோர் எதிர்காலத்தை நோக்கி...

ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர
இதுவே ஒரு நல்ல சந்தர்ப்பம்



- அரசியல் அபிலாஷை
  எமது உரிமைகளையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் சிறந்த நல்லிணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை சரிசெய்ய முயல்வேன்
- பொருளாதார அபிலாஷை
  கல்வி, வேலை மற்றும் விலைவாசி போன்ற அடிப்படை தேவைகளின் பொருளாதாரப் பிரச்சனைகளை சரிசெய்யும் நடவடிக்கைகளை செயற்படுத்துவேன்
- ஒருங்கிணைந்த அரசியலுக்கான அபிலாஷை
  வட- கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றிணைத்துச் செல்லக்கூடிய ஓர் புதிய அரசியல் கலாச்சாரத்தை முன்னெடுப்பேன்

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...



6

சந்திரகாசன்
இளங்கோவன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.11.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலை நம்பிய சீவியம்

இவ்வாரம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதையடுத்து 2025 ஜனவரி 20 பதவியில் இருந்து இறங்கவிருக்கும் ஜோ பைடன் அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதி. 2020 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது அவருக்கு 78 வயது. அவரே அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட மிகவும் முதிய வேட்பாளராக இருந்தார்.

இரு வருடங்கள் கழித்து பைடன் தனது 80ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியபோது பதவியில் இருந்த வேளையில் 80ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய முதல் அமெரிக்க ஜனாதிபதி என்று அவர் வரலாற்றில் பதிவானார்.

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கு பிரசாரங்களை பைடன் முன்னெடுத்த வேளையில் முதுமை காரணமாக உறுதியான முறையில் அவரால் செயல்படமுடியவில்லை. ஜனநாயக கட்சியினரின் வற்புறுத்தலை அடுத்து போட்டியில் இருந்து அவர் விலக துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் களத்தில் இறங்கினார்.

பைடன் போட்டியில் இருந்து விலகியதை அடுத்து அமெரிக்க வரலாற்றில் மிகவும் முதிய ஜனாதிபதி வேட்பாளர் என்ற பெயர் டொனால்ட் ட்ரம்புக்கு வந்தது.

அமெரிக்க வரலாற்றில் வயதில் மிகவும் முதிய ஜனாதிபதியாக இருக்கும் பைடனுக்கு பிறகு இரண்டாவது தடவையாக பதவியேற்கவிருக்கும் ட்ரம்ப் முதிய வேட்பாளர் வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். மூன்றாவது இடம் றொனால்ட் றேகனுக்கு(69).

ஐம்பதுக்கும் குறைவான இளம் வயதில் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் என்று தியோடர் ரூஸ்வெல்ட் (42), ஜோன் எவ். கென்னடி (43), பில் கிளின்டன் (46), யூலிசெஸ் கிராண்ட் (46), பராக் ஒபாமா ( 47) என்று பதிவில் இருக்கிறது.

இந்த விபரங்களை எல்லாம் இன்று வரிசைப்படுத்துவதற்கு ஒரு உள்நாட்டு அரசியல் காரணம் இருக்கிறது. காலியில் கடந்த வியாழக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அதன் தவிசாளர் வஜிர அபேவர்த்தன முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வயது மற்றும் ஆட்சி செய்யும் தகுதி குறித்து கருத்துக் கூறினார்.

உலக வல்லரசான அமெரிக்காவின் மக்கள் 78 வயதான டொனால்ட் ட்ரம்பை தங்களது ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்கிறார்கள். அது இலங்கைக்கு ஓர் உதாரணம். ஐ.தே க. தலைவர் ரணில் இன்னொரு 12 வருடங்களுக்கு நாட்டை ஆட்சி செய்யக்கூடிய தகுதியுடன் இருக்கிறார் என்று அபேவர்த்தன கூறினார்.

ரணிலின் ஞாபகசக்தி வேறு எவரையும் விட வலிமையானதாக இருக்கிறது. எதையாவது நாங்கள் மறந்து விட்டோமானால் உடனே அவரிடம் ஆலோசனை கேட்கிறோம். அடுத்த பாராளுமன்றம் அனுபவமற்ற உறுப்பினர்கள் நிறைந்த வேடிக்கையான இடமாக இருக்கும். இலங்கையில் இடதுசாரி அரசியலின் முடிவுக்கு அடுத்த பாராளுமன்றம் கட்டியம் கூறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற தேர்தலில் எதிரணியின் பிரசாரம் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளின் அனுபவக் குறைவை முக்கியத்துவப்படுத்தியதாகவே இருக்கிறது. ரணிலை விட்டால் வேறு எவராலும் நாட்டைக் காப்பாற்ற முடியாது என்பது அவரைச் சார்ந்தவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. அதை விட மக்களுக்கு கூறுவதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை.

ரணில் 90 வயதுவரை நாட்டை ஆளக் கூடியவராக இருக்கிறார் என்று வேறு அவர்கள் கூறுகிறார்கள். ஐ.தே.க. பலவீனப்படுத்திய தலைவரையே மீட்சிக்கும் நம்பிக்கொண்டிருப்பதே அவர்களின் பெரிய பலவீனம். முதிய வயதிலும் அமெரிக்கர்கள் ட்ரம்பை தெரிவுசெய்கிறார்கள் என்று கூறும் அவர்கள் ரணிலை ஒருபோதும் இலங்கை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யாததற்கான காரணத்தை புரிந்துகொள்ளாமல் அவரின் புகழ்பாடுவதில் காலத்தை வீணே கழிக்கிறார்கள்.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**

“மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர் “
- மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)



## சீன அரசு வழங்கிய நிதி திறைசேரியில் சேர்ப்பு!

கொழும்பு, நவ. 10

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சொத்துகளுக்கு இழப்பீடு வழங்க சீன மக்கள் குடியரசால் வழங்கப்பட்ட 3 கோடி ரூபாய் நிதியுதவி திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த மக்களின் வீடுகளை திருத்துவதற்காக தேசிய வரவு - செலவுத் திட்ட திணைக்களத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களம் அந்த நிதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது.

மேலும், அவசரகால மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் சீன மக்கள் குடியரசில் இருந்து கிடைக்கவுள்ள ஒரு கோடி யுவான் பொருள் உதவி மற்றும் பொருட்கள் பெறப்பட்டவுடன் முறையான கணக்குப் பதிவுக்குப் பிறகு விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன், சேதமடைந்த வீடுகள் மற்றும் உடைமைகளுக்கான இழப்பீட்டு தொகையை வழங்குதல், வீடுகளின் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளையும் அனர்த்த நிவாரணம் மற்றும் கண்காணிப்பு திட்டத்தின் ஊடாக விரைவாக நிறைவேற்றவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஐ)

## தபால் மூலம் வாக்களித்த தமிழ் அரசின் வேட்பாளர்

மட்டக்களப்பு, நவ. 10

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் அ. கருணாகரன் நேற்று முன்தினம் தபால் மூலம் தனது வாக்கை செலுத்தினார்.

எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான இறுதித் தினம் நேற்றுமுன்தினமாகும்.

அரச உத்தியோகத்தரான அ. கருணாகரன் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, அதற்கு விண்ணப்பித்திருந்தார். எனினும், அவர் இறுதிக் கட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரானார்.

இதையடுத்து, அவர் தபால் மூல வாக்களிப்பில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ளுமாறு தேர்தல் திணைக்களத்திடம் கேட்டார். எனினும், அவருக்கு அதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான இறுதிநாளான நேற்று முன்தினம் மட்டக்களப்பு தேர்தல் பணிமனையில் அவர் தனது வாக்கை பதிவு செய்தார்.

(ஐ)

## முருகன், நளினியுடன் சிவாஜிலிங்கம் சந்திப்பு

வடமராட்சி, நவ. 09

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட முருகன், நளினி ஆகியோரை எம். கே. சிவாஜிலிங்கம் சந்தித்து நலன் விசாரித்தார்.

இத்தாவிலிலுள்ள முருகனின் இல்லத்துக்கு நேரில் சென்ற சிவாஜிலிங்கம் இருவரையும் சந்தித்தார்.


தமிழ்நாட்டின் வேலூர் சிறையில் இருந்த காலத்தில் பழ. நெடுமாறனுடன் சென்று தான் சிறையில் சந்தித்தமையை நினைவுகூர்ந்த சிவாஜிலிங்கம், இருவரும் விடுதலையான போது மருத்துவ சிகிச்சையில் இருந்தமையால் நேரில் சந்திக்கவில்லை என்றும் கூறினார்.

முருகன், நளினி தம்பதியர் லண்டனில் உள்ள தங்களது மகளிடம் செல்வதற்கு விண்ணப்பித்தனர் என்றும், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால் மகள் மீண்டும் விண்ணப்பித்துள்ளார் என்றும் அதன் முடிவுக்காக காத்திருப்பதாகவும் சிவாஜிலிங்கத்துக்குக் கூறினர்.

(ஐ-02)

நேற்றைய தினம் ‘அப்புக்குட்டி அண்ணையின் டவுட்’ பகுதியில் கஜேந்திரகுமாருக்குப் பதிலாக விஜித ஹேரத்தின் கார்ட்டூன் பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்
(ஆ-ர்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவேளை! நாம் முந்திவிட்டோம்!

பழ . கருப்பையா

பழைய காலங்களில் கொலை செய்வது இருந்தது. பங்கு பாகத் தகராறில், கட்டிக் கொண்டவளின் கள்ளக் காதலில், நம்பிக்கை மோசடியில், இப்படிப் பல காரணங்களுக்காக மிக இயல்பான மனிதர்கள் கொலைகாரர்களாக மாறிவிடுவதுண்டு!

இத்தகைய கொலைகளைச் செய்வதற்குச் சிறிது முன்பு வரையும், அவர்கள் இயல்பான மனிதர்களே! ஒரு நாயின் மீது கூடக் கல் எறிந்திருக்க மாட்டார்கள்!

ஆயினும் மோசடிக்கு உள்ளாகி விட்டோமே என்னும் பதைபதைப்பு, ஒருவனைக் கொலைகாரனாக மாற்றுகிறது!

இது பழைய காலங்களிலும் நிகழ்காலத்திலும் நடைமுறையில் உள்ள ஒன்றுதான்!

இது போக, 'ஆறலை கள்வர்கள்' எனப்படும் வழிப்பறி கொள்ளையர்கள் கத்தியை வைத்துக் கொண்டு, காதில் கழுத்தில் இருப்பதைப் பறிப்பார்கள். அதில் உயிர் போவதில்லை பொருள்கள் மட்டும் பறிபோகும்!

ஆனால் நிகழ்காலக் கொலைகளை எல்லாம் பார்க்கும்போது எந்த அறிவும் இல்லாமல், தனக்கும் எந்தப் பயனும் இல்லாமல் கொலைகள் அரங்கேறுகின்றன!

ஓர் இளம்பெண், படிப்பதற்காக, கொஞ்சம் தொலைவிலிருந்து மின்சார ரயிலில் வந்து விட்டுச் செல்கிறாள். அவளால் ஈர்க்கப் பட்ட ஓர் இளைஞன், நாள் தோறும் அவள் பின்னால் திரிகிறான். ஒரு நாள் தன் காதலை அவளிடம் வெளிப்படுத்துகிறான்! அவள் இவனைக் கடுமையாக எச்சரிக்கிறாள்!

ஆயினும் அவன் ஓயவில்லை! தொடர்வண்டி நிலைய நடைமேடையில் அவள் காத்திருக்கும்போது, இவன் வழக்கம் போல் நெருங்குகிறான் அவள் கொதிக்கிறாள்! வந்து கொண்டிருந்த மின்தொடர் வண்டியில் அவளைத் தள்ளி விடுகிறான்! அவள் உருத்தெரியாமல் சிதைந்து போகிறாள்!

இதிலே அந்த நேரிய பெண் செய்த குற்றம் என்ன? தன்னுடைய விருப்பமே மேலானது என்று நினைக்கின்றவன், தனக்குக் கிட்டாதவள் யாருக்குமே கிட்டக் கூடாது என்று நினைக்கும் ஓர் அறிவிலி, அவளைக் கொன்று தானும் தூக்கில் தொங்கப் போகிறான்!

அவன் தொங்கப் போவது மிகவும் நியாயம்! அவள் செய்த குற்றம் என்ன?

சங்க காலத்தில் ஒருதலைக் காதல் உண்டு. அவள்



புறக்கணிக்கும்போது இவன் விலகி விடுவான்! அதை 'கைக்கிளை' என்று தமிழ் பேசும்! விரும்பாதவளைக் கொலை செய்வது என்பது காட்டுமிராண்டி நிலை!

ஒரு தாய் அவளுக்கு இரண்டு மகன்கள்! ஒருவனுக்குத் திரு மணம் ஆகிவிட்டது! ஆட்டோ ஓட்டுவது பிழைப்பு வழி! அவனுக்கு இரண்டு பிள்ளைகள்! மிகையான குடிப்பழக்கம் ஆட்டோ ஓட்டுவதில்லை. கூலி வேலை செய்யும் தாயை மிரட்டிப் பணம் கேட்டான்! அவள் இல்லை என்றாள்! ஒரு தடி எடுத்து அவள் தலையில் ஓங்கி அடித்தான்! இரத்தம் பீறிட்டது!

இது பொறுக்காமல் தம்பி அரிவாளை எடுத்து அண்ணனை வெட்டிவிட்டான்! அண்ணன் மடிந்தான்! தம்பிக்கும், தாய்க்கும் இனி மீட்சி இல்லை. ஒரு குடும்பமே அழிந்து விட்டது! இவைதாம் நிகழ்காலச் சமூகப் போக்குகள்!

ஒருவனின் ஒழுகலாறுகளை ஒழுங்குபடுத்துவது வளரிள மைப் பருவம் முழுவதும் நடக்கிறது!

ஒரு மனிதனின் உருவாக்கம் ஒன்றிரண்டு பேரை மட்டும் சார்ந்தது அன்று. அதோர் நெடிய வேலை. அதில் பலர் பங்கு கொள்கிறார்கள்.

முதலில் பெற்றோர்! ஏழு வயதுக்குள் அவனுடைய உருவாக் கம் பெற்றோர் சார்ந்து அமைகிறது! அதுதான் முதன்மையானது! அதுதான் அடித்தளமாக அமைவது! எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்று முற்றாத மூளையில் பதிவிடப்படு கிறது!

இரண்டாவதாகப் பள்ளி அவனை உருவாக்கும் பொறுப்பைக் கையில் எடுக்கிறது! இன்றைய கல்விக் கனவு தொழில் நுட்பம், மருத்துவம், விஞ்ஞானம், கணக்குத் தணிக்கை என்று பெரும் பொருள் ஈட்டித் தருவதை அடிப்படையாகக் கொண்டுவிட்டது!

மூன்றாவதாக சமயம்! இதன் பங்குதான் பெரியது! பெற்றோர்க்கு அடங்காத பிள்ளைகளும், பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகளும் கூடக் கடவுளுக்கு அஞ்சி நடப்பர்! சூடத்தை ஏற்றி அதை அடித்துப் பொய்ச் சத்தியம் செய்யப் பயப்படுவான்! எல்லா வற்றையும் மீறி அடாவடியாக, ஏய்த்துப் பிடுங்கி வாழுபவன் கூட, 'வெட்டுடையாள் காளி உன்னைக் கேட்பாள்' என்று சொன்னால் அஞ்சுவான்!

தாய்க்கு அடங்காதவன், வாத்தியாருக்கு அடங்காதவன், கடவுளுக்கு அடங்குவான்! கடவுளுக்கும் அடங்காதவன் பழைய காலங்களில் அரச தண்டனைக்கு அஞ்சுவான்! அஞ்சிக் கொஞ்சப் பேர் ஒழுங்குக்கு வருவார்கள்!

இத்தகையோர் மனிதர்களில்லை. கயவர் என்பான் வள்ளு வன். கரும்பைப் பிழிவது போல் பிழிந்தெடுத்தால் ஒழிய, இவர் கள் கட்டுக்குள் வர மாட்டார்கள் என்பது வான்புகழ் வள்ளுவன் கருத்து!

அரசின் சட்டம், காவலர்கள், நீதியமைப்பு, சிறை என அனைத்தும் தண்டனைக் கருவிகள்! அச்சுறுத்திக் கொடுமைப் படுத்தி ஒழுங்குபடுத்துபவை!

சங்க இலக்கிய காலம், பௌத்த, சமணக் காலம், சைவ, வைணவ பக்தி இயக்க காலம், சோழப் பேரரசு காலம் வரை பெற்றோர், கல்வி நிறுவனம், இறையச்சம், அரசின் தண்டனை கள் என்னும் அடிப்படையிலே மனித உருவாக்கம் தொடர்ந்து நிகழ்ந்தது! மீறல்கள் வரம்புக்குட்பட்டிருந்தன!

13-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பலவீனமான அரசுகள், குளறுபடிகள் என்னும் நிலையில் கம்பனைப் போல் பேரறி வாளர்களின் பிறப்பு முற்றாக நின்றுவிட்டது! இலக்கியம், கலை, அறிவுப் பெருக்கம், சமூக ஒழுக்கம் அனைத்தும் சீர் கேடடைந் தன! 'கோல் உயரத்தான் குடி உயரும்!'

இந்தக் காலகட்டத்தில் இறையுணர்வைப் பெருக்கி மனித னைத் தூக்கி நிறுத்த வேண்டிய பொறுப்பு, திருமூலர், திரு நாவுக்கரசர், பட்டினத்தார், ஆழ்வார்கள், இராமாநுசர் ஆகியோரிடமிருந்து மடங்களுக்கு மாறிவிட்டன.

மடங்கள் நான்காயிரம் வேலி, மூன்றாயிரம் வேலி என்று சொத்துடைமை நிறுவனங்களாக உருவாகினவே ஒழிய, இறையச்சம், வினையச்சம் ஆகியவற்றை அவனுக்கு ஊட்டி, செம்மாந்த மாந்தனை உருவாக்கும் முயற்சி நடைபெறவில்லை!

அனைத்து முனைகளிலும் தோல்வி! நெடிய இருளுக்குப் பிறகு தோன்றிய ஒரே வெளிச்சம் வள்ளலார்தான்!

அகத்தே கறுத்து, புறத்தே வெளுத்திருக்கும் மாந்தருக் கெல்லாம் சமயத்தின் உண்மை நோக்கமான உயிரிரக்கம், பசி நீக்கம் என இரண்டையும் மூலக் கொள்கையாக்கி மனித உரு வாக்க முயற்சியைப் புதுப்பித்தார்!

## இந்தவார ராசிபலன் 10.11.2024 - 16.11.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 24
நல்ல நேரம்: 09.05 - 10.35 ராகு காலம் : 04.35 - 06.05 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவர். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்தபடி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமை யும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதி காரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். பெண்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு பொழுதைக் கழிப்பது மகிழ்ச்சி அடைவீர்கள். தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக் கச் செய்யும். புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயரும். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். பதிப்பாளர்களுக்கு தொழிலில் ஏற்றம் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க் கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். பிரிந்த உறவுகள் சேரும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். வாக்குவன்மை ஓங்கும். வாகன வசதியும், நற் கல்வியும் கிடைக்கும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். விரைவு (பாஸ்ட் புட்) உணவு களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலை தூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். அழகிய ஆடை ஆபர ணங்கள் வாங்குவீர்கள். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல் லதே நடக்கும். வியாபாரிகளுக்கு புதிய பொருட்களின் வரவால், பண வரத்து அதிகரிக்கும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ் வார்கள். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மாணவர்க ளுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் புதிய இடத்திற்கு பணி மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பிரி வும், பகையும் ஏற்படலாம். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, மக்களின் உடல் நிலையில் மருத்துவச் செலவுகள் ஏற்பட லாம். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர் கள். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். வீட்டில் சுபகாரி யங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி சிறப்பாக அமையும். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உறவுகளை அனுசரித்து சென் றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். பணிபுரியும் பெண் களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்க லாம். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் பணி உயர்வு கிடைக்கும்

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணி பத்தால் தனலாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நில வும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக் கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக் கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க் கையில் குழப்பம் வரலாம். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். நல்ல புத்திர பாக்கி யம் ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் முழுமையான ஒத்துழைப்பு காரணமாக குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## தமிழ் மக்களுக்கு அடுத்த பாராளுமன்றத்தில்...

# உறுதியான பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் ஆபத்து!



வீரகத்தி தனபாலசிங்கம்







பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னமும் மூன்று நாட்களே இருக்கின்றன. முன்னைய பாராளுமன்ற தேர்தல்களை விடவும் இந்த தடவை இலங்கையின் அரசியல் கோலங்கள் பெருமளவுக்கு மாறியிருக்கும் சூழ்நிலையில் தேர்தல் நடைபெறுகிறது.

பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகளில் எந்த ஒன்றுமே தங்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு வாக்களிக்குமாறு மக்களை கேட்கவில்லை. பலம்பொருந்திய எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தில் செயற்படுவதற்கே வாக்களிக்குமாறு அவற்றின் தலைவர்கள் கேட்கிறார்கள். அதேவேளை, முதன் முதலாக ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் கூட ஒழுங்கான முறையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு தேவையான உறுதியான பாராளுமன்ற பெரும்பான்மையை தருமாறு மக்களை கேட்கிறதே தவிர, மூன்றில் இரண்டு அல்லது ஆறில் ஐந்து பெரும்பான்மை போன்று எதுவும் தேவையில்லை என்றுதான் கூறுகிறது. அதன் பல தலைவர்களின் தேர்தல் பிரசார உரைகளும் ஊடக நேர்காணல்களும் இதை வெளிக்காட்டுகின்றன.

ஆனால், ஜனாதிபதி திசாநாயக்கவும் அரசாங்கத்தின் ஒரேயொரு அமைச்சரான விஜித ஹேரத்தும் பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால் நிரப்புமாறும் எதிர்க்கட்சியே தேவையில்லை என்றும் தேர்தல் பிரசாரங்களின் தொடக்கத்தில் மக்களிடம் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

எதிரணி அரசியல்வாதிகள் குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜனாதிபதி திசாநாயக்கவின் ஒன்றரை மாதகால ஆட்சியில் தவறு கண்டு பிடிப்பதிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களினால் நீண்ட நாட்களுக்கு ஆட்சிசெய்யக்கூடிய ஆற்றலும் அனுபவமும் இல்லை என்று பிரசாரம் செய்வதிலுமே கூடுதல் அக்கறை காட்டுகிறார்கள். ஒரு குறுகிய காலத்துக்குள்ளாகவே தேசிய மக்கள் சக்தியில் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கி விட்டார்கள் என்ற ஒரு எண்ணத்தை உருவாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கட்சியையே அடுத்து வரும் பாராளுமன்ற தேர்தலிலும் ஆதரித்து பதவிக்கு கொண்டுவரும் வழக்கத்தில் இருந்து இந்த தடவை மக்கள் விலகுவார்கள் என்று நம்பமுடியாது. மக்களிடம் எதைக்கூறி வாக்கு கேட்பது என்றே தெரியாமல் எதிர்க்கட்சிகள் தடுமாறுகின்றன. ஜனாதிபதி திசாநாயக்க தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணையை வழங்குவார்கள் என்று முடியும். அரசியல் குழப்பநிலை ஒன்று உருவாவதை மக்கள் விரும்ப மாட்டார்கள்.

தென்னிலங்கை நிலைவரம் இவ்வாறிருக்கையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நிலைவரம் மிகவும் குழப்பகரமானதாக இருக்கிறது. அடுத்த பாராளுமன்றத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் குறிப்பாக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் ஒரு கட்டுறுதியானதாக இல்லாமல் ஒவ்வொரு கட்சியும் ஓரிரு உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்துக்கு வரக்கூடிய வாய்ப்பே இருக்கிறது.

இரு மாகாணங்களிலும் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் முன்னென்றும் இல்லாத வகையில் பெரும் எண்ணிக்கையில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன. அதனால் வாக்குகள் சிதறடிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மொத்தம் 28 பாராளுமன்ற ஆசனங்களுக்கு 2067 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

வட மாகாணத்தில் மாவட்ட ரீதியாக நோக்கும்போது ஆறு ஆசனங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. மொத்தம் 396 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். வன்னி மாவட்டத்தின் ஆறு ஆசனங்களுக்காக 23 கட்சிகளையும் 25 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 432 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் நான்கு ஆசனங்களுக்காக 17 கட்சிகளையும் 14 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 217 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஐந்து ஆசனங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களும் 392 வேட்பாளர்களை களமிறக்கியிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்தின் ஏழு ஆசனங்களுக்காக 23 கட்சிகளையும் 40 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 630 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் மொத்தம் 8888 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களில் 29 தேசியப்பட்டியல் ஆசனங்களை தவிர்த்தால் 196 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கே மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள். வடக்கு , கிழக்கின் 28 ஆசனங்களை தவிர்த்துப் பார்த்தால் எஞ்சிய ஏழு மாகாணங்களிலும் உள்ள 17 தேர்தல் மாவட்டங்களில் உள்ள 168 ஆசனங்களுக்கு 6821 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அதாவது தென்னிலங்கையில் ஒரு ஆசனத்துக்கு 40 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற அதேவளை, வடக்கு, கிழக்கில் ஒரு ஆசனத்துக்கு 73 பேர் போட்டியிடுகின்றார்கள்.

ஐந்து மாவட்டங்களின் வேட்பாளர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் தமிழ் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் சேர்த்தவர்களாகவே இருக்கிறார்கள். இவற்றில் பெரும்பாலானவை மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க ஆதரவு இல்லாதவை என்பதுடன் பல வேட்பாளர்களும் மக்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள்.

> இலங்கை தமிழர் அரசியலை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள பல்வேறு குழுக்களும் தனவந்தர்களும் பல தமிழ்க்கட்சிகளுக்கு நிதியுதவி செய்கிறார்கள். பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியதற்கு அந்த வெளிநாட்டுப் பணமே பெரிதும் காரணமாக இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, சுயேச்சைக் குழுக்களும் கூட உணர்ச்சிகளைத் தூண்டுவதன் மூலமாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தமிழ்த் தேசியவாத சுலோகங்களை தாராளமாகப் பயன்படுத்துகின்றன. பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவருவதற்கு முன்னதாக அரசியலில் எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் இருந்த பேர்வழிகளும் கூட திடீரென்று சுயேச்சைக் குழுக்களாக தேர்தல் களத்தில் இறங்கி தமிழ்த் தேசியவாதத்தை பாதுகாக்கப்போவதாக கூறுகிறார்கள்.

இலங்கை தமிழர் அரசியலை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள பல்வேறு குழுக்களும் தனவந்தர்களும் பல தமிழ்க்கட்சிகளுக்கு நிதியுதவி செய்கிறார்கள். பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியதற்கு அந்த வெளிநாட்டுப் பணமே பெரிதும் காரணமாக இருக்கிறது.

தங்களுடன் தொடர்பு கொண்ட சில புலம்பெயர் தமிழ்க்குழுக்கள் பணம் தந்தால் சுயேச்சைக் குழுவை அமைத்து தேர்தலில் போட்டியிட முடியுமா என்று கேட்டதாக யாழ்ப்பாணத்தில் உள்ள பல கல்விமான்களும் சமூகத்தில் மதிப்புடைய முக்கியஸ்தர்களும் இந்த கட்டுரையாளரிடம் நேரடியாகவே கூறினார்கள். இலங்கை தமிழர் அரசியல் முன்னென்றுமில்லாத வகையில ஊழல் மயப்படுவதற்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் உள்ள அரசியல் குழுக்கள் உதவியாக இருக்கின்றன.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களினால் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட தமிழ்க் கட்சிகள் தமிழரின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப்போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில் நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான அணுகுமுறைகளை கடைப் பிடித்திருந்தால் இன்று தமிழர் அரசியல் சமுதாயம் இந்தளவுக்கு சிதறிச் சீரழிந்திருக் காது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் காலஞ்சென்ற தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் இயல்பாகவே வந்து சேர்ந்தது. அதற்கு பிறகு வடக்கு, கிழக்கு தமிழர்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான சக்தியாக கூட்டமைப்பே விளங்கியது.

போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் 2004 பாராளுமன்ற தேர்தலில் 22 ஆசனங்கைளைக் கைப்பற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு 2010 தேர்தலில் 14 ஆசனங்களையே பெறக்கூடியதாக இருந்தது. மீண்டும் 2015 பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஆசனங்கள் 16 ஆக அதிகரித்தன. 2020 தேர்தலில் அதன் ஆசனங்கள் பத்தாக குறைந்தன.

தமிழ் தேசிய கூட்டமைப்பை தவிர கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி போன்ற சில தமிழ்க் கட்சிகளும் ஓரிரு ஆசனங்களுடன் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தன.

இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுக்கு இடையில் முரண்பாடுகள் வளரத்தொடங்கின. பிரதான அங்கத்துவ கட்சியான இலங்கை தமிழரசு கட்சி தங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு முயற்சிப்பதாக பங்காளிக் கட்சிகள் குற்றஞ்சாட்டின. கடந்த வருட முற்பகுதியில் நடக்கவிருந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் அரசு தனித்து போட்டியிட முடிவெடுத்த பின்னர், எஞ்சியிருந்த தழிழீழ விடுலை இயக்கம் (ரெலோ ), தமிழீழ மக்கள் மக்கள் விடுதலை கழகம் ( புளொட்) போன்றவை உள்ளூராட்சி தேர்தல்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற அமைப்பின் சார்பில் போட்டியிடுவதற்கு முடிவெடுத்தன. கூட்டமைப்பில் இருந்து ஏற்கெனவே வெளியேறியிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் வேறு சில குழுக்களும் புதிய கூட்டணியில் இணைந்து கொண்டன.


கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கியதில் இந்த புதிய கூட்டணி முக்கிய பங்கு வகித்தது. அந்த தேர்தல் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளை மாத்திரமல்ல கட்சிகளுக்குள் நிலவிய பூசல்களையும் அம்பலப்படுத்தியது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமதியான உங்கள் வாக்குகளை குப்பையோடு குப்பையாக்காதீர்கள்!

நா. இரட்ணலிங்கம்
(செயலாளர், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி)




வாக்குரிமை பெற்றுள்ள அனைவரும் தமது பெறுமதிமிக்க வாக்குகளை அளிப்பதன் மூலம் தமது விருப்பத்தினையும், எதிர்ப்பினையும், எதிர்பார்ப்புகளையும் எதிர்வரும் 14ஆம் திகதியன்று வெளிப்படுத்த தயாராகின்றனர்.


வாக்களிக்கவுள்ள மக்களுக்கு, குறிப்பாக வடக்கு கிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் வாழும் தமிழ் மக்களுக்கு, வாக்களிப்பின்போது விசேடமாக கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து அறிவுறுத்துவதும், தெளிவுபடுத்துவதும் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைவரினதும் கடமையாகும்.

முதலாவதாக, வாக்களிப்பு நாளன்று அனைத்து தமிழ் வாக்களர்களும் வயது வேறுபாடின்றி தமது வாக்குரிமையை பயன்படுத்துவது கட்டாயக் கடமையாகும்.

வழமையாகவே தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் வாக்களிப்பு வீதங்கள் திருப்திகரமானதாக அமைவதில்லை. அதேநேரத்தில், அந்த மாவட்டங்களில் வாழும் ஏனைய சமூக மக்களின் பிரதேசங்களில் வாக்களிப்பு வீதங்கள் மெச்சத்தக்கவையாகவும், தமது சமூகப் பிரதிநிதிகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் பங்களிப்பு செய்யக்கூடியதாகவும் அமைவதை அவதானிக்க முடிகிறது.

தியாகங்கள் நிறைந்த ஆயுதப் போராட்டத்தின் தோல்வி, தமிழ்த் தலைமைகள் எனச் சொல்லிக்கொள்பவர்கள் சிலரின் சுயநலமான செயற்பாடுகள், தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஏராளமான பிரச்சினைகளுக்கு நீண்ட காலமாக தீர்வுகள் காணப்படாமை போன்ற பல காரணங்கள் தமிழ் மக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டாலும்கூட அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் இருப்பிற்கும் வேட்டு வைக்கக்கூடிய விதத்தில் நாம் எவரும் செயற்படுவது ஆரோக்கியமானதல்ல.

வாக்காளர்களாக பதிவு செய்வதில் சிரத்தையின்மை, வாக்களிப்பு வீதத்தின் வீழ்ச்சி, வாக்களிப்பில் அக்கறை காட்டாமை போன்ற காரணங்கள் இன்று யாழ் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற



பிரதிநிதித்துவத்தை குறைத்துள்ளது. எனவே நாமும் எம்மைச் சுற்றியுள்ளவர்களும் முழுமையாக எமது வாக்குகளை பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நாம் அளிக்கும் வாக்குகள் யாவும் பெறுமதிமிக்கவையாக, தீர்மானிக்கக்கூடியதாக அமைய வேண்டும். தேர்தல் சட்டத்தின் பிரகாரம், எமது வாக்குகள் கணக்கில் எடுக்கப்படாதவையாக மாறுவதற்கு நாமே காரணமாக இருந்து விடக் கூடாது. எமது வாக்குகளை, விடயங்களை தீர்மானிக்கும் வாக்குகளாக தீர்க்கமாக பயன்படுத்த வேண்டுமே தவிர, அவை தேர்தல் அதிகாரிகளால் தகுதியில்லாதவையாக கழிவுக் கூடைக்குள் போடப்படுவதற்கு வழியை ஏற்படுத்தக் கூடாது.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம், ஒரு தேர்தல் மாவட்டத்தில், அளிக்கப்பட்ட வாக்குகளில் நிராகரிக்கப்பட்டவை போக, மீதியான செல்லுபடியாகும் மொத்த வாக்குகளின் ஐந்து வீதத்திற்கும் குறைவான அளவில் வாக்குகளைப் பெறும் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் வாக்குகள் தேர்தல் அதிகாரிகளால் இறுதியான வாக்கு எண்ணிக்கையில் இருந்து புறம்தள்ளப்பட்டுவிடும். ஏற்கனவே கூறப்பட்டது போல, அவை கழிவுக் கூடைக்குள் போடப்பட்ட பின்னர், மீதமுள்ள கட்சிகள் மற்றும் குழுக்கள் பெற்ற மொத்த வாக்குகளைக் கொண்டே ஒரு பிரதிநிதிக்கான வாக்கு எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், யாழ் தேர்தல் மாவட்டத்தில் 16,220 வாக்குகள் பெற்ற சுயேச்சைக்குழு - 05, 13,564 வாக்குகள் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி, 6,522 வாக்குகள் பெற்ற ஐ.தே.க ஆகியவை உள்ளிட்ட 28 கட்சிகள், சுயேச்சைகுழுக்கள் மொத்தமாக பெற்ற 59,763 வாக்குகள் எண்ணிக்கைக்குட்படாமலே கழிவுகளாக்கப்பட்டுவிட்டன.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், 10,064 வாக்குகள் பெற்ற தமிழர் சமூக ஜனநாயக கட்சி, 8,789 வாக்குகள் பெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, 8,232 வாக்குகள் பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை உள்ளிட்ட 41 கட்சிகள், சுயேச்சைகுழுக்களின் 46,204 வாக்குகள் எண்ணிக்கைக் குட்படாமலே கழிவுகளாக் கப்பட்டுவிட்டன. கழிக்கப்பட்ட 46,204 வாக்குகளில் குறைந்தது 10,000 வாக்குகளாவது அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்திருந்தால் தமிழ் தேசியத்திற்காக குரல்தரவல்ல மேலும் ஒரு பிரதிநிதி வன்னியில் கிடைத்திருப்பார்.

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில், 3,775 வாக்குகள் பெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, 2,745 வாக்குகள் பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட 24 கட்சிகள், சுயேச்சைகுழுக்களின் 18,347 வாக்குகள் பயன்படாமல் போயுள்ளன. இம்முறைத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி திருமலை மாவட்டத்தில் ஏனைய சமூகத்தினரின் வாக்குகளை பல கூறுகளாக பிரிக்க வா[illegible]தால், தமிழ் மக்கள் முழுமையாக தமது வாக்குகளை செலுத்தி, வெல்லக்கூடிய தமிழ் தேசியத் தரப்பாக உள்ள, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சிக் கூட்டிணைவை ஆதரிப்பார்களாயின் அக் கூட்டு இரண்டாவது ஆசனத்தையும் பெறமுடியும் என ஆசைப்படுகின்ற திருமலை மாவட்ட மக்களின் பேரவாவில் தவறு ஏதும் இருக்க முடியாது.

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 8,113 வாக்குகள் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, 4,960 வாக்குகள் பெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, 1,203 வாக்குகள் பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை உள்ளிட்ட 32 கட்சிகள், சுயேச்சைகுழுக்களின் 57,016 வாக்குகள் கணக்கிற்கு எடுக்கப்படவில்லை. இதில் குறைந்தது பதினையாயிரம் வாக்குகள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்டிருந்தால் அக் கூட்டமைப்பு மேலும் ஒரு பிரதிநிதித்துவத்தை பெற்றிருக்க முடியும்.

திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்தில், ஏற்றுக்கொள்ளப்பட்ட 385,998 வாக்குகளில் 20,847 வாக்குகள் வாக்கெண்ணிக்கைக்கு உட்படாமல் விடப்பட்டுள்ளது. அம் மாவட்டத்தில் உள்ள மக்கள் தமது வாக்குகள் வீணடிக்கப்படக்கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் செயற்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனாலும் தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 25,255 (6.54 வீதம்) வாக்குகளையும், அகில இலங்கை தமிழர் மகாசபை 29,379 வாக்குகளையும் (7.61 வீதம்) பெற்று தமிழர்களின் பலம் இரண்டாக பிளவுபட்டதால் அங்கு தமிழர்கள் தமக்கு பிரதிநிதித்துவம் எதனையும் பெறமுடியாமல் போனது. ஆனால் இம்முறை, எண்பது வீதமான தமிழ் வாக்காளர்கள், வெல்லக்கூடிய, ஒற்றுமை எனும் தளத்தில் நிற்கக்கூடிய தமிழ் தேசியத் தரப்பிற்கு வாக்களித்து தமது பிரதிநிதித்துவத்தை நிச்சயப்படுத்தும் மனநிலைக்கு வந்துள்ளதாக தெரிகிறது.

தேர்தல் காலத்தில் வாக்காளர்களின் தீர்மானத்தில் வேட்பாளர் ஒருவரின் பிரதேசம், மதம், கல்வித் தகைமை, தனிப்பட்ட குணாதிசயங்கள் செல்வாக்குச் செலுத்துமென்பது நிதர்சனமானது. ஆனாலும் அவ்வாறான எண்ணங்களும், போக்குகளும் தமிழ் தேசியத்தின் பலத்தை சிதைப்பதற்கு உதவியாக அமைந்து விடக்கூடாது.

அதே நேரத்தில் சிங்கள தேசியக் கட்சிகளின் வேட்புமனுக்களில் திட்டமிட்டு உள்வாங்கப்பட்டிருக்கும் தமிழ் வேட்பாளர்கள் எக்காலத்திலும் வெல்ல முடியாதவர்கள் என்பதும், தமிழ் வேட்பாளர்கள் பெற்றுக் கொடுக்கும் வாக்குகள் அவ் அணிகளில் உள்ள ஏனைய சமூக வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்பையே உறுதி செய்யும் என்பது எமது மக்களின் கசப்பான அனுபவமாகும். இவ் விடயம் வன்னியிலும், கிழக்கிலும் தேசிய மக்கள் சக்தி ஊடாக மாற்றத்தைக் கொண்டு வருவோம் எனக் கூறும் தமிழ் வேட்பாளர்களுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் பொருந்தும்.

பேரினவாதக் கட்சிகளின் முகவர்களினாலும், தமிழ்க் கட்சிகளின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட தனவந்தர்களாலும், நயமாக பேசி நிதியுதவி அளிக்கப்பட்டு உள்வாங்கப்பட்ட படித்த பண்பான பல வேட்பாளர்களுக்கு தேர்தல் களநிலவரங்களின் உண்மைத் தன்மைகள் விளங்கவில்லை அல்லது அவர்களுக்கு நேர்மையான முறையில் எதுவும் சொல்லப்படவில்லை என்றே தெரிகிறது.

எனவே, தமிழர்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்கும் அனைத்து மக்களும் தங்களது பெறுமதியான வாக்குகளை சிதறாமல், கழிவுப் பொருட்களாக மாறாமல் பாதுகாப்பது அவர்களது தலையாய கடமையாகும்.

மூன்றாவதாக, தமிழினத்தின் மீது இன்னமும் தளர்வடையாமல் இருக்கும் பேரினவாத சக்திகளின் கெடுபிடிகளும், நில அபகரிப்புகளும், பௌத்த மயமாக்கலும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லாமலிருக்க வேண்டுமாயின், விமர்சனங்களுக்கு அப்பால் அது ஏதாவது ஒரு தமிழ்த் தேசியக் கட்சியால் மட்டுமே முடியும் என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.
வேட்பாளர்கள் மத்தியில் குற்றங்குறைகள் உள்ளோரைத் தவிர்த்து, பொருத்தமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, தமிழ் தேசியக் கட்சிகளை வலுப்படுத்தக் கூடிய போதியளவு வாய்ப்பினை நாட்டின் தேர்தல் முறைமை எமக்குத் தந்துள்ளது.

தனிப்பட்ட ஒரு வேட்பாளரின் குறைகளால், பலப்படுத்தப்பட வேண்டிய ஒரு அணி பலவீனமடைய இடமளிக்காதிருப்போம். தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் இதுவரை என்ன செய்துள்ளன எனக் கேள்வி கேட்பவர்களுக்கும் அவர்களை கேட்கத் தூண்டுகின்ற பேரினவாதக் கட்சிகளின் முகவர்களுக்கும் எமது ஒரே பதில், எப்போதும் எங்கள் பிரதிநிதிகள் தடுப்பணையாக செயற்பட்டிருக்காவிடின் எமது தேசியம், நிலம், பண்பாடு, பொருளாதாரம் அனைத்தும் பௌத்த சிங்கள மேலாதிக்க வெள்ளத்தில் என்றோ அள்ளுண்டு போயிருக்கும் என்பதேயாகும்.


இன்றைய தேர்தல்கள நிலவரப்படி, தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில், நம்பிக்கைக்கு உரிய அணியாகவும், ஒற்றுமையின் தளத்தில் நின்று செயற்படும் அணியாகவும் வெல்லும் அணியாகவும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மட்டுமே உள்ளது என்று பெரும்பான்மையான தமிழ் மக்கள் உணர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளதை, ஏனையோரும் ஏற்றுக்கொண்டு அதனைப் பலப்படுத்த ஒன்று சேருவதே எம் மக்களுக்கு நிரந்தரமான பயனைப் பெற்றுத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு லஷ்மன் கதிர்காமர் இன்று தமிழருக்குத் தேவையா?

பனங்காட்டான்





இந்த வாரத்து வியாழக்கிழமை 14ம் திகதி இலங்கையின் பொதுத்தேர்தல் என்பது நீதிமன்ற அறிவிப்பின் பின்னர் நிச்சயமாகி விட்டது. இதனால் அடுத்து வரும் நாட்கள் வேட்டைத் திருவிழா போன்று பல காட்சிகள் இடம் பெறும்.

தமிழர் தாயகத்தில் போட்டி ஒரு வகையாகவும், சிங்களப் பிரதேசங்களில் வேறு வகையாகவும் களம் அல்லோலகல்லோலப்படுகிறது. கட்சிகள், சுயேட்சைகள், வேட்பாளர்கள், வாக்காளர்கள், சின்னங்கள் என்று ஒரே அமர்க்களம்.

இது போதாதென்று கட்சிகளைக் கொள்முதல் செய்வது வணிக ரீதியில் இடம்பெறுகிறது. இணங்கி வராத கட்சிகளின் வேட்பாளர்கள் வேறு வகையாக கவனிக்கப்படுகிறார்கள். தமிழக கனவுலகில் நட்சத்திரங்களைக் கொள்முதல் செய்துவரும் பாணியில்தான் இலங்கை அரசியலிலும் ஒரு புள்ளி துள்ளி விளையாடுகிறது. இது இந்த வாரத் தேர்தலில் ஒரு சைட் ஸ்டோரியாக அமைந்து விட்டது.

இனி பிரதான கதைக்கு வருவோம். தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதைவிட யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பது இப்போது பிரதான அம்சமாக மாறியுள்ளது. இந்த விடயத்தில் மட்டும் தமிழர் தரப்பு, சிங்கள தரப்பு என்று பாகுபாடு இல்லை.

மூன்று எம்.பிக்களுடன் இருந்த அநுர குமார திஸ்ஸநாயக்க ஜனாதிபதியானதுடன் அடக்கி வாசிக்கப்பட்ட எதிரலை, தேர்தல் காலத்தில் பொங்கி நுரை கக்குகிறது. ஐக்கிய தேசிய கட்சியின் ஒரேயொரு எம்.பியாகவிருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி ஜனாதிபதியானபோது பெரிதுபடுத்தாதவர்கள், அநுர குமாரவை சுற்றி அடிக்கிறார்கள். பொதுத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை (113 ஆசனங்கள்) பெற்றுவிட்டால் அடுத்து வரும் வருடங்களில் தேசிய மக்கள் சக்தி எனும் ஜே.வி.பியின் கை ஓங்கி விடும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

அநுர குமார தரப்பு ஏறத்தாழ அனைத்துத் தொகுதிகளிலும் இளையோரையும், பெண்களையும் அபேட்சகர்களாக்கியுள்ளது. ஓகோ ஓகோவென்று இவர்களின் பரப்புரை வேகம் கொண்டுள்ளது. அரசியல் அனுபவமற்ற இளையோரால் நாடாளுமன்றம் நிரப்பப்பட்டால், சட்டங்களை இயற்றும் இந்த உயர்சபை அதன் கனதியை இழந்து விடும் என்ற பாணியில் எதிர்த்தரப்பு வாதம் செய்கிறது. அதனால், அனுபவம் வாய்ந்த தங்கள் தரப்பிலுள்ள முதியோர் இல்ல அங்கத்தவர்களை நாடாளுமன்றம் அனுப்புமாறு ரணில் பகிரங்கமாக வேண்டி வருகிறார்.

இவ்விடத்தில் 1950களில் சிங்கள தேச அரசியல் எவ்வாறு மாற்றம் பெற்றது என்பதை திரும்பிப் பார்க்க வேண்டும். டி.எஸ்.சேனநாயக்கவின் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க சிறீலங்கா சுதந்திர கட்சியை ஆரம்பித்தார். அப்போது தமது கொள்கையாக 'பஞ்ச மகா பலவேகய' (ஐந்து அதியுயர் படை) என்ற பெயரில் நாட்டு வைத்தியர்கள், பௌத்த பிக்குகள், சுயமொழி ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை இணைத்து 1956 தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றினார்.

அன்று, நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானவர்களில் சுமார் எழுபது வீதத்துக்கும் அதிகமானவர்கள் கல்வி அறிவு குறைவானவர்கள் மட்டுமன்றி நாடாளுமன்ற விவாதங்களில் பங்கேற்கும் தகுதியும் ஆற்றலும் அற்றவர்கள்.

1970ல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியை கைப்பற்றிய போது, அவரது சிறீலங்கா சுதந்திர கட்சியிலும் சட்ட அறிவு மற்றும் விவாதத் திறமையற்றவர்கள் கணிசமாக இருந்தனர். இதனால் அப்போதைய நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க சட்டக் கல்லூரி அனுமதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். உயர் கல்வித் தராதரம் இல்லாமலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டக் கல்லூரியில் அனுமதி பெற இது உதவியது. மூதூர் இரண்டாவது எம்.பியாகவிருந்த அ.தங்கத்துரையும், பெலியத்த தொகுதி எம்.பியாக தெரிவான மகிந்த ராஜபக்சவும் இந்தச் சலுகை வழியாக சட்டத்தரணிகள் ஆனவர்கள். (2008ல் கொல்லப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபிள்ளையே மகிந்த ராஜபக்சவுக்கு சட்டக்கல்லூரி பரீட்சையில் 'குதிரை' ஓடியதாகவும், அதற்கான வெகுமதியாக அவருக்கு அமைச்சர் பதவியை மகிந்த ராஜபக்ச வழங்கியதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்).

நாடாளுமன்றத்தில் அரசறிவற்றவர்கள் எழுபது ஆண்டுகளுக்கு முன்னரும், 1970களிலும் அதற்குப் பின்னரும் இருந்துள்ளனர் என்பதை நன்கறிந்த ரணில் விக்கிரமசிங்க, இனிவரப்போகும் நாடாளுமன்றத்தில் அவ்வாறானவர்கள் தெரிவாகி வரப்போவதாக அச்சுறுத்துவது நாடாளுமன்றத்தின் கௌரவத்தை காப்பாற்றுவதற்காக அல்ல. அநுரகுமார அணிக்கு பெரும்பான்மை கிடைப்பதை தடுக்க வேண்டுமென்பதற்காகவே என்பது பளிச்சென தெரிகிறது.

இன்னொரு விடயம் முக்கியமானது. ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், நாடாளுமன்றம் இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் அமைந்தால் என்ன நடைபெறும் என்பதற்கு இரண்டு சம்பவங்களை உதாரணமாகச் சொல்லலாம்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது நாடாளுமன்றம் ரணிலைப் பிரதமராகக் கொண்ட கட்சியினுடையதாக இருந்தது. இதனால் இருவருக்கிடையிலும் கொள்கை ரீதியாக ஒத்துப்போக முடியவில்லை. இறுதியில் நாடாளுமன்றத்தை திடீரென கலைத்த சந்திரிகா அடுத்த தேர்தலில் தனது கட்சியை ஆட்சியில் அமர்த்தினார். 2015ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானபோது ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ரணில் பிரதமரானார். இருவருக்குமிடையில் தொடர்ந்து பிணக்கு இருந்ததே தவிர இணக்கம் ஏற்படவில்லை. திடீரென ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிய மைத்திரி, பெரமுனவின் தலைவரான மகிந்தவை பிரதமராக்கியதும், நீதிமன்ற உத்தரவினால் ரணில் மீண்டும் பிரதமரானதும் பழைய வரலாறல்ல.

இப்போது அநுர குமார ஜனாதிபதியாகியுள்ளார். நாட்டில் ஸ்திரமான அரசாட்சி அமைய வேண்டுமெனில் நாடாளுமன்றம் அநுர குமாரவின் கட்சி சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகவுள்ளது. இது தவறி, இன்னொரு கட்சி நாடாளுமன்றத்தை கைப்பற்றுமானால் முழு நாடுமே சீரழியும் என்பதற்கு சந்திரிகா, மைத்திரி காலத்து மேற்சொன்ன சம்பவங்கள் நல்ல உதாரணம்.

> படிப்பறிவோ சட்ட அறிவோ இல்லாதவர்கள் இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாவது எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க ஆட்சியின்போது 'பஞ்ச மகா பலவேகய' கொள்கை வழியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வாரத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் எம்.பியாக தெரிவாகும் ஒருவர் அமைச்சர் பதவியில் இலக்கு வைத்துள்ளார் என்றால் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பது இன்னொரு லஷ்மன் கதிர்காமரை உருவாக்குவதற்கா என்ற கேள்வி முனைப்பு பெற்றுள்ளது.

இந்த வாரத் தேர்தலில் முழு நாட்டிலும் முக்கிய பேசுபொருளாக இருப்பது சுமந்திரனுக்கு அமைச்சர் பதவி என்பது. தலைவரே இல்லாத தமிழரசுக் கட்சியை தமக்கு சாதகமான அணியாக்கி தேர்தலில் போட்டியிடும் சுமந்திரனுக்கு அமைச்சர் பதவி என்ற செய்தி மறுக்கப்பட்டு வந்தாலும் எங்கோ ஒரு பொறி இருப்பது உணரப்படுகிறது.

சமீபத்தில் ஊடகம் ஒன்றில் இது தொடர்பாக சுமந்திரனிடம் கேட்டபோது, "அமைச்சர் பதவியை ஏற்கக் கூடாது என்ற எந்த முடிவும் தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை" என்ற பாணியில் பதிலளித்தார். முன்னர் ஒரு தடவை இவ்விடயம் பற்றி கருத்து வெளியிடுகையில், "காலத்தின் தேவை கருதி தேவைப்படின் அமைச்சர் பதவியை ஏற்பதில் தவறில்லை" என்றவாறு இவர் கூறியது ஞாபகத்தில் உள்ளது.

1965ல் டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசில் தமிழரசுக் கட்சி சார்பில் மு.திருச்செல்வம் எவ்வாறு அமைச்சரானார் என்பதை, 1964ம் ஆண்டில் பிறந்து ஒரு வயதே ஆன சுமந்திரன் அறிந்திருக்க வில்லை போலும்.

டட்லியின் தேசிய அரசில் தமிழரசும் இணைந்தபோது அவர்களுக்கு ஓர் அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் எவரும் அமைச்சர் பதவியை ஏற்பதில்லையென்ற முடிவை தமிழரசுக் கட்சி கடைப்பிடித்து வந்ததால், கட்சிப் பிரமுகரான மு.திருச்செல்வத்தை முதலில் செனட்டராக நியமித்து அதன் வழியாக அமைச்சராக்குவதற்கு டட்லியுடன் இணக்கம் காணப்பட்டது.

தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் முன்னர் அமைச்சராகவிருந்ததை தொடர்ந்து வசைபாடி வளர்ந்த தமிழரசுக் கட்சி தங்களுக்கும் அதே நிலைமை வரக்கூடாது என்பதற்காக செனட்டர் வழியாக அமைச்சர் பதவியை ஏற்றது. 1968ல் திருக்கோணேஸ்வர புனித நகர் பிரகடன விவகாரத்தில் ஏற்பட்ட தகராறினால் தமிழரசுக் கட்சியின் முடிவுக்கிணங்க மு.திருச்செல்வம் அமைச்சர் பதவியை துறக்க நேர்ந்தது.

இது இடம்பெற்று சுமார் ஐம்பது ஆண்டுகளான இக்கால இடைவெளியில் எத்தனையோ இனப்படுகொலைகளையும் இடப்பெயர்வுகளையும் தமிழினம் சந்தித்துள்ளது. தமிழ்த் தேசியம் சிங்களப் பேரினவாதத்தால் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான தமிழர் காணாமலாக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்கதையாகவுள்ளது. இக்காலத்தில் எந்தவேளையிலும் அமைச்சர் பதவியை ஏற்க வேண்டுமென தமிழரசுக் கட்சி முடிவெடுக்கவில்லை.

நிலைமை இப்படியிருக்க தமிழரசுக் கட்சியின் ஒருவர் அமைச்சர் பதவியை நாடுவதா? எந்த மத்திய குழுவில் அல்லது பொதுச்சபையில் அமைச்சர் பதவியை ஏற்க முடிவெடுக்கப்பட்டது? தமிழினம் தனது பிறப்புரிமையையும் வாழ்வுரிமையையும் தனது சொந்த மண்ணில் இழந்துவரும் நிலையில் அமைச்சர் பதவியை பெறுவதற்காக தமிழரசுக் கட்சியில் ஒருவர் எம்.பியாக வேண்டுமா? இதற்காக தமிழ் மக்கள் வாக்களித்து தமிழரசுக் கட்சியை வெல்ல வைக்க வேண்டுமா? தீவிரமாகவும், திடமாகவும் சிந்திக்க வேண்டிய நேரம் இன்றையது.

தப்பித்தவறி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தமிழரசுக் கட்சியில் ஒருவர் வெற்றி பெறுவாரானால்..... இன்றைய நிலையில் இன்னொரு லக்ஷ்மன் கதிர்காமர் தேவையா என்ற கேள்வி பலர் முன்னாலும் முனைப்புடன் எழுந்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 ஆண்டுகள் கால தமிழ் அரசியல்!

மாலி



'ஒண்ணுமே புரியல்லே உலகத்திலே...'

சந்திரபாபு பாடிய, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் இந்த சினிமா பாடல்தான் சில நாள்களாக மனதில் இடையிடையே ஒலிக்கக் கேட்கிறது.

'கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?' நம்முடைய பாராளுமன்ற தேர்தலும், அதில் போட்டியிடும் நம்மவர்களும் தான் இது. இதனைப் புரிந்துகொள்வது எப்படி?

1949இல் இலங்கை தமிழ் அரசு கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து கணக்கிட்டு, இன்று வரையிலான 75 ஆண்டுகள் காலக் கணக்கும் இந்தத் தேர்தல் அரங்கில் பரவலாக பேசப்படுகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த ஆறு மாதங்களில், மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டமூலத்தை அரசாங்கம் கொணர்ந்தபோது பாராளுமன்றதில் அதனை எதிர்த்து வாக்களித்து, பிரதமர் டி. எஸ். சேனநாயக்க ஓர் 'இனவாதி' என்றும் குறிப்பிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், பின்னர் இரண்டே வாரங்களில், டி. எஸ். சேனநாயக்க அரசாங்கத்தில் ஓர் அமைச்சரானார். கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி அமைச்சராக அவர் பதவியேற்றார்.

1944இல் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் இணைந்து தமிழ் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், இவ்வேளையில் அவரது சகாக்கள் சிலருடன் காங்கிரசிலிருந்து வெளியேறி, இலங்கை தமிழ் அரசு கட்சியை ஆரம்பித்தார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற சமபல பிரதிநிதித்துவத்தைக் கோரியபோது, சமஷ்டி கோரிக்கையுடன் செல்வநாயகம் தமிழ் அரசு கட்சியை ஆரம்பித்தார்.

ஐக்கிய இலங்கையை விரும்பி, 1917 இல் இலங்கை தேசிய சபை (Ceylon National Association), இலங்கை சீரமைப்பு சபை (Ceylon Reform League) ஆகியவற்றைத் தோற்றுவித்து அவற்றின் தலைவராகவும், பின்னர் 1919இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராகவுமிருந்த சேர் பொன். அருணாசலம், சட்ட சபையில் இன விகிதாசார பிரதிநிதித்துவம் தொடர்பிலான கொள்கை முரண்பாட்டில் தேசிய காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகி, இலங்கை தமிழ் லீக்கை 1921இல் ஆரம்பித்திருந்த நிலைமைகளில், செல்வநாயகம் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். 1956இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொணர்ந்த 'சிங்களம் மட்டும்' சட்டம், செல்வநாயகத்தின் தமிழ் தேசிய கொள்கைக்கு பேராதரவைத் சேர்த்தது.

1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் புதிய குடியரசு அரசியலமைப்பை கொணர்ந்த வேளையில், தமிழ் அரசுக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ், சௌமியமூர்த்தி தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், 'அடங்கா தமிழன்' சி. சுந்தரலிங்கத்தின் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி ஆகியவையும் இணைந்த தமிழர் கூட்டணி உருவானது. அது, பின்னர் 1976இல், வட்டுக்கோட்டை தீர்மானத்தைத் தொடர்ந்து தனிநாடு கொள்கையுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியாகியது.

> "ஒன்றில் நாம் உரிமை பெற்ற இனமாக வாழவேண்டும் அல்லது செத்து மடியவேண்டும்'' - என்றுதான் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தன்னுடைய கடைசி பாராளுமன்ற உரையில் கூறினார்.
> அந்தக் கூற்றின் விசுவாசமான 'புரிதலுடன்', இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஆண்டுகளைக் கணக்கிட்டு, கட்சியின் பாரம்பரியம் பேணி, தேர்தலில் போட்டியிடுகிறது!

1949இல் தமிழ் அரசு கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 1972இல் தழிழர் கூட்டணியும் பின்னர் 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இலங்கைத் தமிழர்களின் மக்கள் செல்வாக்கைப் பெற்ற அரசியல் சக்தியாக விளங்கியபோது, எஸ். ஜே. வி. செல்வநாயகம் அந்த மக்கள் சக்தியின் தலைவராக திகழ்ந்ததோடு, தமிழ் அரசு கட்சி இக் காலப்பகுதியின் பெரும்பான்மை கட்சியாகவுமிருந்தது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரு புரிந்துணர்வுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகிவிட, 1977 பொதுத் தேர்தலில் தமிழ் அரசு, தமிழ் காங்கிரஸ் என்றில்லாமல், அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினராக, அதன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர்.

1977இல் தேர்தலுக்கு முன்னதாக எஸ். ஜே. வி. செல்வநாயகம் மறைந்துவிட்டபோது, தமிழ் அரசு கட்சியின் அ. அமிர்தலிங்கம் அவரின் ஸ்தானத்தை அடைந்தார். அமிர்தலிங்கம் 1989இல் கொலைசெய்யப்பட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் என்பனவும் இணைந்து, 2001 பிற்பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இரா. சம்பந்தன் இதன் தலைவரானார். விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்து, விடுதலைப் புலிகளின் 'பதில்' அமைப்பொன்றாக தமிழ் தேசிய கூட்டமைப்பு மாறியதும், தமிழர் விடுதலைக் கூட்டணி இக் கூட்டிலிருந்து வெளியேறியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவிருந்த மு. சிவசிதம்பரம் 2002இல் காலமாகிவிட்டபோது, வீ. ஆனந்தசங்கரி அதன் தலைவராகவிருந்தார்.

2001 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியேறிவிட்ட பின்னர் அச் சின்னத்தைப் பாவிக்க இயலாது போகவே, தமிழ் அரசுக் கட்சியின் 'வீடு', அதன் சின்னமாக பயன்படுத்தப்பட்டது. இரா. சம்பந்தனின் தலைமையில் வீடு சின்னத்துடனான தமிழ் தேசிய கூட்டமைப் புடன், இலங்கையில் தமிழர்களுடைய அரசியல், அதன் போக்கில் திசை திரும்பியது.

சமஷ்டி கோரி, பின்னர் 1977 தேர்தலில் தனிநாடு கோரிக்கையுடன் தேர்தலில் வென்றவேளையிலும் தமிழ் அரசு கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பாராளுமன்ற அரசியலில், அதன் கோட்பாட்டு ஆளுமையுடன் தங்கள் அரசியலை மேற்கொண்டனர். சுதந்திரத்துக்கு முன்னரான காலத்திலிருந்தே சிங்கள அரசியல் தலைவர்களின் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட மறைமுக அரசியலில் , இவர்கள் தமக்கான உரிமைகளில் பெரிதாக எதனையும் சாதித்துவிட இயலாத நிலையே 80களின் தொடக்கத்தில் இவர்களின் சாத்வீக வழி அரசியலில் தீவிரவாதம் உள் நுழைய ஏதுவாகியது. ஆனாலும், தம்முடைய அரசியலில் அதுவும் (தீவிரவாதம்) அதன் வழியில் கவனத்துடன் முன்செல்ல, பாதுகாப்பான நிழலை அவர்கள் அளித்தார்கள்.

வரலாற்றில் ஆயுத போராட்டம் ஒரு காலகட்டமாகி, அப்போது இலங்கை அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளில், தீர்வுகளுக்கான சில உடன்பாடுகள் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் இந்த அரசியல் தலைவர்கள் அவர்களை - விடுதலைப் புலிகளைப் புறந்தள்ள நினைக்காததில், அவை தவறிப்போயின. அரசியல் தலைவர்களும் விடுதலைப் புலிகளும் ஒரு பரஸ்பர புரிதலுடன் வென்றிருக்கூடியவற்றை இனம் இழந்தது. அரசியல் தலைவர்களையும் இழந்தது.

ஆக, பாராளுமன்ற முறையிலற்ற, விடுதலைப் புலிகளின் வழித் தீர்வொன்றே தீர்வு என்பது கோட்பாடாகியது. விடுதலைப் புலிகளை வெளிப் படையாக ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்து, அவர்களின் ஆலோசனையுடன் செயல்பட இரா. சம்பந்தனின் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைப்பட்டதுடன், அதுவரை காலமும் பேணப்பட்டுவந்த தமிழர்களின் ஜனநாயக அரசியல் அங்கீகாரம், சர்வதேச அரங்கிலும் சிதைவுற்றது.

2009இன் பின்னரும் மக்களின் நிலைப்பாடுகள், விருப்புகள் என்னவோ ஆனால், தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் தங்களின் வெற்றி இதுசார்ந்ததென்றே எண்ணுகிறார்கள். கட்சிகளுக்கிடையேயான போட்டிகளும் இது சார்ந்தே இருக்கின்றன.

இப்போது, 'தமிழ்த் தேசியம்' இதற்கான சுலோகம். ஒருவர் பாராளுமன்றம் செல்வதற்கான பயணச் சீட்டு இது. அதைப் பெற, பலரும் முண்டியடிக்கிறார்கள்.

"ஒன்றில் நாம் உரிமை பெற்ற இனமாக வாழவேண்டும் அல்லது செத்து மடியவேண்டும்" - என்றுதான் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தன்னுடைய கடைசி பாராளுமன்ற உரையில் கூறினார்.

அந்தக் கூற்றின் விசுவாசமான 'புரிதலுடன்', இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஆண்டுகளைக் கணக்கிட்டு, கட்சியின் பாரம்பரியம் பேணி, தேர்தலில் போட்டியிடுகிறது! •

## முடக்கிலிருந்து முதுமனிதர் சொடக்குப் போடுறார்

வடக்கில் இம்முறை வென்றவர்
வாக்குகள் வீழுமென முதுமனிதர்
முடக்கில் இருந்து அடிக்கடி
சொடக்குப் போடுறார் நித்தம்.

ஏலவே சென்றவர் நாலுபேர்
யாழிலே வருவர் என்று
நாளெலாம் பாடுறார் தேவாரம்.

ஈந்தவர் தேர்தலில் என்றும்
நலிந்தவர் வாக்கால் வெல்வது
பலிக்குமாம் அவரது வாதம்.

புதியவர் இந்த முறை
துவியராய் வந்துசேர உந்தன்
இருவிரல் செய்யுமாம் மாயம்.

கூட்டில் பிரிந்தவர் பெறுகிற
'வோட்'டுகள் நிலையைச் சின்னச்
சங்கதி பேசும்.

தமிழரின் தேசியத் தாகம்
தீராத தீரர்கள் கோசம்
தீர்வைக் கேட்பதுதான் ஞாயம்.

மதிதனைப் பாறிக்கிளறி
விதிதனை வந்தவர் தருகில்
அதுவரை இருந்து பார்ப்பம்.

வென்றவர் திஸநாயக்க குமாரன்
நன்றாகத் திசையைக் காட்டின்
மறுமுறை எம்மனங்கள் மாறும்.

• • •

சலுகைகள் இனிமேல் பாதையில்லை
அழுகைகள் இன்னுந்தான் ஓயவில்லை
விலையிலா உயிர்போன பாவம்.

இணைந்ததைச் சேர்க்க இணக்கமில்லை
இழந்ததைத் தர யாருமில்லை
இனத்துக்கு ஒரு தலைவனில்லை
இதனாலா எம்மீது இளக்காரம்.

சம்மதம் ஏதும் சொல்லாதிரின்
இம்மாதம் முழுதிலும் அவர்சாபம்.
ஒன்றுமே தராய் எனில்......

உன்னினம் குலை நடுங்க
இன்னுயிர் ஈந்தவன் காலத்தை
நினைத்து நினைத்து வாழ்ந்துசாவம்.



- மகேசன் கஜேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு தூங்குவதனால் ஈழதமிழர் அவல நிலை தொடருகிறது!

- ச. வி. கிருபாகரன்,
பிரான்ஸ்



“கடந்த கால வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றிய அறிவு இல்லாத மக்கள், வேர்கள் இல்லாத மரம். - (மார்க்கஸ் மோகையா கார்வே, ஜமேக்காவின் அரசியல் செயற்பாட்டாளர்)

இப் பழமொழியை அல்லது கூற்றை இங்கு கூறுவதற்கான காரணம், பிராந்திய வல்லரசான இந்தியாவின், தென் மாநிலத்தில் உள்ள தமிழ் நாடு, தமது சரித்திரம் கலை கலாச்சாரத்தை மறந்து வாழ்கிறார்களா? அல்லது மறந்துள்ளது போல் தமது அரசியல் லாபங்களிற்காக நித்திரை கொள்வது போல் பாசாங்கு பண்ணுகிறார்களா?

தமிழ் நாட்டு அரசியல்வாதிகள், எந்த அரசியல் கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும், ஈழத்தமிழ் மக்கள் மீதான தமது நாட்டின் அரசியல் சரித்திரத்தை, ஒரு முறை மீள் பார்வை செய்ய கடமைப் பட்டுள்ளார்கள். தமிழ் நாட்டின் இன்றைய நிலைமை தொடருமானால், இறுதியில் தமிழ் நாடு என்பதே கேள்விக் குறியாகும் நிலை, காலப் போக்கில் ஏற்பாடும் என்பதை தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும், இவர்களிற்கு வாக்களிக்கும் தமிழ் நாட்டு மக்களும் சிந்திக்க வேண்டும்.

மொழி, கலை, கலாச்சாரமென ஒட்டு மொத்தமாக இனத்தின் அடிப்படையில், தமது இனத்திற்காக அர்பணித்த இனங்கள் பல. விசேடமாக, கிழக்கு ஐரோப்பாவில் இனங்களிடையான ஒற்றுமையை யாவரும் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும், ஈழத்தமிழர்கள் விடயத்தை, தற்பொழுது தமது தேர்தல் பிரச்சாரத்திற்கு மட்டும் பாவிப்பது ஆக்கபூர்வமான விடயம் அல்ல.

இன்றைய உலகில், ஒரு சிறிய நாடான இஸ்ரேல், தமது நாட்டில் மட்டுமல்லாது, வேறு பல நாடுகளிற்கு பாரிய சவாலாக நிற்கிறார்கள் என்றால், அதற்கு உலகளவிய ரீதியாக வாழும் அவர்களது யூத இன அடையாளமே காரணமாக காணப்படுகிறது. இதற்காக இஸ்ரேல் செய்வது யாவற்றையும் ஏற்று கொள்வதாகவோ, அல்லது நியாயப் படுத்துவதாக யாரும் கருதுவார்களேயானால், அது விதண்டாவாதமாகவே காணப்படும்.

நாம் இங்கு 1971ம் ஆண்டில் புதிய நாடாக உதயமான பங்களாதேஷை பார்ப்போமானால், அன்றைய கிழக்கு பாகிஸ்தானின், வெளிவாரியான சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தை, அங்கு ஷேக் முஜிபூர் ராகுமானால் ஆரம்பிக்கப் பட்ட பொழுது, அன்று மேற்கு பாகிஸ்தான் படைகளினால் எதிர்க்கப் பட்டு, மக்கள் தாக்கப்பட்டார்கள். அப்பொழுது, கிழக்கு பாகிஸ்தானில் வாழும் லட்சக்கணக்கான வாங்காள மக்கள், இந்தியாவின் மாநிலமான மேற்கு வங்காளத்தில் தஞ்சம் கோரினார்கள். இதன் விளைவாக, இந்தியாவின் தலையீடு கிழக்கு பாகிஸ்தானின் விடுதலைக்கு வழிவகுத்தது.

இது, காலம் சென்ற பிரதமர் இந்திரா காந்தியின் காலத்தில் நடைபெற்றிருந்தாலும், பங்காளதேஷ் உதயமாகி சில ஆண்டுகளின் பின்னர், உதயமான இலங்கைதீவின் வடக்கு கிழக்கு வாழ் மக்களின், அதாவது தமிழீழ மக்களின் வெளிவாரியான சுயநிர்ணய போராட்டம், அன்றைய கிழக்கு பாகிஸ்தானான இன்றைய பங்காளதேஷிற்கும் இடையில் எந்த பாரிய வித்தியாசங்களையும் அடிப்படையாக காண முடியாது.

வடக்கு கிழக்கிலிருந்து தமிழ்நாட்டில் தஞ்சம் கோரிய 92,000 ஈழத்தமிழர்கள், இன்று தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும், அவர்களது கட்சிகளும் தூக்கத்தில் இருப்பது, இவர்கள் சிங்கள பௌத்த அரசுடன் கைகோர்த்து நின்று வேடிக்கை பார்பதற்கு சமானாது.

தமிழகத்தில் 104 முகாம்களிலும், ஒரிசாவில் ஒரு முகாமிலும் சுமார் 58,200 இலங்கை அகதிகள் வசித்து வருகின்றனர். அவர்களில் 33,200 பேர் முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றனர்.

அவர்கள் அனைவருக்கும் இந்திய அரசு- தமிழ்நாடு அரசு - தங்குமிடம், சுகாதார வசதிகள், அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் போன்றவற்றின் உதவிக்கு உரியவர்கள் என கருதுகிறேன்.

தமிழீழ மக்களின் வெளிவாரியான சுயநிர்ணய போராட்டம், ஆயுத போராட்டமாக மாற்றப்பட்டது முதல், தமிழ் நாட்டில், ஆளுநர் - ஜனதிபதி ஆட்சி, சிறு சிறு காலம் தவிர்ந்த மற்றைய காலங்களில், திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆகிய இரு கட்சிகளுமே, தமிழ் நாட்டில் ஆட்சியிலிருந்தன. இதில், விசேடமாக முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் காலத்தில், தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்களிற்கான ஆதரவு என்பது, எந்தவித தங்குதடையின்றி கிடைத்ததை உலகம் அறியும். ஆனால் தி.மு.க. ஆட்சி காலத்தில் சில விடயங்களில் அவர்களது ஆதரவு ஈழத்தமிழர்களிற்கு முழுதாக கிடைத்தது என்பது கேள்வி குறியாகவே இருந்ததுடன், இவர்கள் ஆயுத போராட்டம் முடிவிற்கு வருவதற்கு உதவினார்கள் என்ற வினா இன்றும் தொடருகிறது.

ஆனால் ஒட்டுமொத்தமாக அன்றைய கால கட்டத்தில், தமிழ்நாட்டை பொறுத்த வரையில், தமிழ்நாட்டு மக்கள், அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், ஊடகங்கங்கள், இளைஞர்கள் போன்றோர்களது ஈழத்தமிழர்களிற்கான ஆதரவை - கார்த்தால், கதவடைப்பு, ஊர்வலங்கள் போன்றவற்றை தொடர்ச்சியாக நடாத்தி, இந்தியா மத்திய அரசை, ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் விழிப்படையவும் செயல்படவும் உதவியது என்பது பழைய கதை.

அதேவேளை, மதிர்ப்பிற்குரிய பழ நெடுமாறனும் அவரது நண்பர்களது செயற்பாடுகள் மிகவும் பாராட்டிற்குரியவை. உதாரணத்திற்கு, ஒருமுறை ஈழத்தமிழருக்கு நாம் துணையாக பலமாக இருப்போமென, சிறிலங்கா அரசிற்கு காண்பிக்கும் நோக்குடன், பல வள்ளங்களில் தோணிகளில், அவ்வேளை யில் சென்னையில் பி.பி.சி ஊடக நிருபராக கடமையாற்றிய மார்க் ரேலி போன்றோருடன் திரு பழ நெடுமாற னும் அவரது குழுவும், தமிழீழத்தை நோக்கி பயணம் செய்த பொழுது, அவர்கள் சிறிலங்கா கடற்படையினரி னால் நடுவழியில் நிறுத்தப்பட்டனர். இதுபோன்ற சம்பவங்கள் அன்று இடம் பெற்ற காரணங்களினால், இந்தியாவின் மத்திய அரசு, சிறிலங்கா மீது சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதை யாரும் மறக்க முடியாது.

தமிழ்நாட்டில் இடம்பெற்ற இப்படியான அழுத்தங்களினால், 1987ம் ஆண்டு யூன் மாதம், “பூமாலை” எனும் பெயரில், இந்தியா விமானப்படை விமானங்கள், சிறிலங்கா அரசின் அனுமதியின்றி, சிறிலங்காவின் எல்லைகளை தாண்டி, இருபத்து ஐந்து தொன் நிறை கொண்ட -உணவு பொதிகள், மருந்து வகைகளை தமிழீழ மக்களிற்கு ஆகாய வழியாக வழங்கியிருந்தார்கள் என்பது பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

இதேவேளை, திம்பு பேச்சுவார்த்தையை தொடர்ந்து, பிரபாகரனிற்கும் சிறிலங்கா ஜனதிபதிக்குமான பிரத்தியேக பேச்சுவார்த்தை, அதன் பின்னர், சிறிலங்காவின் கண்முடித்தனமான “ஒப்பரேசன் லிபரேசன்” இராணுவ நடவடிக்கைக்கு சவலாக, இந்தியா ராஜதந்திரிகள், களத்தில் நேரடியாக இறங்கியவை போன்ற பல விடயங்கள், அன்று தமிழ்நாட்டின் அரசு, அரசியல்வாதிகள், மக்கள், மற்றைய அமைப்புகளினால் ஈழவிடுதலை போராட்டத்திற்கு அழப்பரிய ஆதரவு உதவிகளாக உலகம் பார்த்து மெய்சிலிர்த்தது.

இதேவேளை சரியோ பிழையோ, இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, வடக்கு கிழக்கில் சிறிலங்கா இராணுவம் அவர்களது முகாம்களில்

**ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசின் அக்கறை குறைந்து காணப்படுவதற்கு உண்மையான காரணம், தமிழ்நாடு தூக்கத்தில் இருப்பதுதான்.**

முடக்கப்பட்டதுடன், இந்திய இராணுவத்தின் வருகையும், பதின்மூன்றாம் திருத்த சட்டமும் உருவானது.

இங்கு நாம் காவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், இவை யாவற்றையும் இந்தியாவின் மத்திய அரசின் முன்னெடுப்புக்களிற்கு, தமிழ் நாட்டு மக்கள் காரணமாக இருந்தார்கள் என்பதே முக்கிய விடயம்.

ஆனால் இன்று, ஆயுத போராட்டம் முடிவடைந்து பதினைந்து வருடங்களாகியும் - தமிழ்நாட்டு அரசினாலோ, அரசியல் தலைவர்களினலோ ஈழத்தமிழ் மக்களது இன்றைய அவல நிலைக்கு, இவர்களால் எந்த உருப்படியான முன்னெடுப்பு நடைபெறாது இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

ஆகையால் தமிழ்நாட்டில், ஈழத் தமிழர் சார்பான - ஹர்த்தால், கதவடைப்பு, ஊர்வலங்கள் யாவும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, இந்தியாவின் மத்திய அரசை விழித்து செயற்பாட வைப்பது தமிழ்நாட்டு மக்கள் கைகளிலேயே உள்ளது.

தமிழீழத்தில் இந்தியா இராணுவம் செய்த அநியாயங்கள் அட்டூழியங்கள், ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய விடயங்களிற்கும், இன்றைய உலக அரசியல் நிலைக்கு தொடர்புகளை மேற்கொள்வது என்பது விதண்டவாதம். இவற்றை, இந்தியா இராணுவத்தினால் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டவன் என்ற முறையில் கூற விரும்புகிறேன். யாவற்றுக்கும் சாட்டு போக்கு கூறி, எமது இனத்தின் எதிர்காலத்தை நாசமாக்குவதனால், யாருக்கு நன்மை என்பதை யாவரும் சிந்திக்க வேண்டும்.

ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசின் அக்கறை குறைந்து காணப்படுவதற்கு உண்மையான காரணம், தமிழ்நாடு தூக்கத்தில் இருப்பது. இந்திய மத்திய அரசு, உண்மையில், ராஜீவ் காந்தியின் கொலையை முன்னிலை படுத்தி, தமது பூகோள அரசியலை நகர்த்துவார்களென யாரும் எண்ணுவார்களானால், அவர்கள் ஓர் சிறிய வட்டத்திற்குள் சிந்திப்பவர்கள் என்பதே உண்மை.

காலம் சென்ற அடல் பிஹாரி வாஜ்பாய், இந்திய அரசியல்வாதியும் கவிஞரும் ஆவார். அவர் முதலில் 1996ல் 13 நாட்களுக்கும், பின்னர் 1998 முதல் 1999 வரை 13 மாத காலத்திற்கும், பின்னர் 1999 முதல் 2004 வரை இந்தியாவின் பிரதமராக பணியாற்றினார். இதே காலப்பகுதியில், திரு ஜோர்ஜ் மேத்யூ பெர்னாண்டஸ் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றினார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு ஜோர்ஜ் மேத்யூ பெர்னாண்டஸ் அவர்களினால், “இலங்கை ஈழத் தமிழர்களுக்குடனான தோழமை சர்வதேச மாநாடு” என்ற பெயரில், தமிழீழ ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவினால், புது டில்லியில் 15 டிசம்பர் 1997, ஏற்பாடு செய்து மிக வெற்றியாக நடைபெற்றுள்ளது.

இவ் மாகாநாட்டில் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் (முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்) திரு. ஏ.பி. வெங்கடேஸ்வரன் (இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர்) மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, திரு. ஜீல் பிக்குவா (வழக்கறிஞர், பிரான்ஸ்) ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர், திரு பழ நெடுமாறன் போன்று, இந்தியா உட்பட பல சர்வதேச புள்ளிகள் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடதக்கது.

ஆகையால், ராஜீவ் காந்தியின் கொலை என்பது, சிலரது அரசியலிற்கு முக்கியமாக காணப்பட்டாலும், உலக அரசியலின் நீரோட்டத்தின் எதிர்கால செயற்பாடுகளிற்கு, இது ஓர் தடைகல் அல்ல. இன்றைய சிறிலங்காவின், சிங்கள பௌத்த அரசியல் போக்கையும் எதிர் காலத்தையும் மனதில் நிறுத்தி, ஈழத் தமிழர்களது அரசியல் அவல நிலைக்கும், இதேவேளை பெருந்தொகையான தமிழ் நாட்டு மீனவர்களது கொலை, அவர்களது தொழில் உபகரணங்களையும் சொத்துக்களையும், சிறிலங்காவின் பாதுகாப்பு படைகளினால் நாசமாக்கப் பட்டு வருவதையும் மனதில் கொண்டு, தமிழ்நாடு தமது தூக்கத்தை கலைத்து விளித்து எழுந்து செயற்பட வேண்டும்.

அடுத்த வாரம் இலங்கைதீவின் பாரளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஈழத்தமிழர் அரசியல் நிலைமைகள் மேலும் சர்ச்சையாக்கப்படும் நிலையே காணப்படுகிறது. விசேடமாக யாழ்பாணம் மாவட்ட தொகுதியில், பல முன்னிலை கட்சிகளிற்கும், சுயேட்சை குழுக்களிற்கும் பாரிய ஏமாற்றங்கள் ஏற்படப் போகிறது. இதனால் தமிழசு கட்சிக்குள் மீண்டும் ஓர் பாரிய பூகம்பம் வெடிக்கவுள்ளது.

தமிழீழ மக்கள் தமது அயலவர்களது உதவி இல்லாது, இலங்கைதீவில் எதையும் சாதிக்க முடியாது என்பதை, கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலான அரசியல் ஏமாற்றம் உலகத்தை சிந்திக்க வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கார்த்திகை காந்தளும் பொப்பி மலரும்

குரு அரவிந்தன்

கனடாவில் நினைவுதினம் என்பது போர்க்காலத்தில் நாட்டுக்காக உயிர் தந்தவர்களையும், அக்காலத்தில் போர்முனையில் தம் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றியவர்களையும் கௌரவிக்கும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அனுசரிக்கப்படுகின்றது. இதில் கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த மரணித்த போர் வீரர்களும் அடங்குவர். இந்த வாரம் முழுவதும் கனடியர்கள் சிகப்பு நிறத்திலான பொப்பி மலர்களை அணிவதன் மூலம் மரணித்தவர்களை நினைவேந்தல் மூலம் கௌரவிக்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த மொய்னா மைக்கேல் என்பவர்தான் சிவப்பு பொப்பி மலரை 1918 ஆம் ஆண்டு இதற்காக அறிமுகம் செய்தார். 1921 ஆம் ஆண்டு கனடாவில் இந்த சிவப்பு பொப்பி மலர் இதற்காக அறிமுகமானது. கனடாவில் சில அமைப்புக்கள் வெள்ளை பொப்பி மலரை அறிமுகம் செய்தாலும் அது பெரிதாக மக்களிடையே பிரபலமடையவில்லை.

இதற்கு முன்பு தென்னாபிரிக்கப் போரின் நினைவு நாளாகக் கனடாவில் இந்தத் தினம் இருந்தது. முதலாம் உலப் போரின் போது சுமார் 61,000 கனடியர்கள் கொல்லப்பட்டனர். 1918 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் தான் போர்நிறுத்தத்திற்கான கையெழுத்திடப்பட்டது. இதன்




காரணமாக 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 திகதி கனடியர்கள் போர் நிறுத்தத் தினத்தை நினைவேந்தல் தினமாக நினைவு கூர்ந்தாலும், உத்தியோக பூர்வமான நினைவேந்தல் 1931 ஆம் ஆண்டுதான் இத்தினத்தில் இடம் பெற்றது. அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளும் வெவ்வேறு பெயர்களில் இந்தத் தினத்தையே கடைப்பிடிக்கின்றன.

இந்த நினைவேந்தல், இரண்டாம் உலகப் போர், கொரியப் போர் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடந்த போர், அமைதி காக்கும் பணிகள் மற்றும் பிற சர்வதேச இராணுவ ஈடுபாடுகளின் போது போரில் இறந்தவர்களின் நினைவாகவும் இடம் பெறுகின்றது. இதுவரை சுமார் 118,000 க்கும் அதிகமானோர் வெளிநாட்டு மோதல்களில் இறந்துள்ளதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 2020-2021 ஆண்டு கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக பொது இடங்களில் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவில்லை.

தாயகத்தில் எம்முயிர் காக்கத் தம்முயிர் தந்தவர்களைத் தமிழர்கள் நினைவுகூரும் நாளாகக் கனடாவில் நவெம்பர் 27 ஆம் திகதி இடம் பெறுகின்றது. அவர்கள் செய்த தியாகம்தான் இன்று நாங்கள் அனுபவிக்கும் சுதந்திரம் என்பதை அடுத்த தலைமுறையினரும் இந்த நிகழ்வின் மூலம் அறிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. முதல் இரு வாரங்களில் சிவப்பு பொப்பி மலர்ச்சின்னம் அணிந்தவர்களையும் கடைசி வாரத்தில் காந்தள் மலர்ச் சின்னம் அணிந்தவர்களையும் பொது இடங்களில் காண முடிகின்றது. ரொறன்ரோவில் 27-11-2024 மிசசாகா எயர்போட் வீதியில் உள்ள இன்ரநாசனல் சென்ரரிலும், மொன்றியலில் Le Chateau Royal மண்டபத்திலும், ஒட்டாவாவில் Nepean Sportsplex என்ற இடத்திலும் மேலும் பல இடங்களிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

நிச்சயமாக எம் உயிர் காக்கத் தம் உயிர் தந்தவர்கள் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள், காலம் மறந்தாலும் நாம் மறக்கக்கூடாது!

---



## வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** முன்னாள் போராளிகளுக்கு அங்கீகாரம் தேவை என்பதற்காகவே தாம் தேர்தலில் போட்டியிடுவதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தெரிவித்துள்ள அதேவேளையில், இணைந்திருந்த வடக்கு - கிழக்கை பிரித்தவர்கள் இந்த தேசிய மக்கள் சக்தியினரே என்றும் குறிப்பிட்டுள்ளாரே?.

**வியுக்தியார்:** அவர் சொல்கின்ற ஒரு விடயத்தில் எனக்கும் உடன்பாடுதான். அவரைப் போன்ற போராளிகள் வெறும்கால்களுடன் காடுகளிலும் மேடுகளிலும் தமிழ் மக்களுக்காக கஷ்டப்பட்டபோது, சப்பாத்துக் கால்களுடன் ஏசி அறைகளில் கொழும்பில் இருந்தவர்கள் இப்போது இங்கே வந்து தாங்கள் தான் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது போராளிகளும் போராட்ட இயக்கத்தில் இருந்து வந்தவர்களும் அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லைத்தான். ஆனால், இணைந்திருந்த வடக்கு, கிழக்கை பிரித்தவர்கள் தேசிய மக்கள் சக்தியினர் என்பதுதான் சற்று நெருடலாக இருக்கின்றது. பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டபோது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இயங்கும் என்றும் ஒரு வருடத்தில் அவ்வாறு தொடர்ந்து இணைந்திருப்பதா என்பதை அறிய சர்வஜனவாக்கெடுப்பு நடாத்தப்படும் என்றுமே இருந்தது. ஒரு வருடமாகியும் அவ்வாறு சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படாததால், அவை இணைந்திருப்பது சட்டவிரோதம் என்றுதான் ஜேவிபி வழக்கு தாக்கல் செய்தது. வெற்றியும் பெற்றது. ஆனால், அவ்வாறு வாக்கெடுப்பு நடத்தக்கூடிய சூழலை வடக்கு கிழக்கில் இல்லாமல் செய்தவர்கள் நாம்தான் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வார் என்றே நினைக்கின்றேன்.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** இதுவரை காலமும் எதிர்ப்பு அரசியல் செய்ததால் எமது மக்கள் சந்தித்த வலிகள் - வடுக்கள் நிறையவே உள்ளன. ஆகவே, வலிகள் - வடுக்களை குறைக்கவேண்டுமானால் சமரச அரசியலிலேயே ஈடுபடவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளர் ந. ரவீந்திரகுமாரன் தெரிவித்துள்ளாரே. தமிழ் அரசு கட்சி தனது பாதையை மாற்றப்போகின்றது என்பதை இவர் மூலம் அறிவிப்பதாக கொள்ளலாமா?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. இப்போது தமிழ் அரசு கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர், தெற்கோடு சமரச அரசியலை நடத்த வேண்டும் என்ற விருப்பத்தோடு இருப்பவர்தான். அதனால்தான் அவர் தனது விருப்பத்தை ஏற்றுக்கொள்கின்றவர்களைத்தான் இந்தத் தடவை தமிழ் அரசின் வேட்பாளர்களாகவும் நியமித்திருக்கிறார். அதுசரி, தமிழ் அரசு சமரச அரசியலை ஏதோ இப்போதுதான் தொடங்கப்பேவதாக சொல்கிறீர்களே, அவர்கள் தான் நல்லாட்சி அரசின் காலத்திலேயே சமரச அரசியலை தொடங்கிவிட்டார்களே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** மதுபானசாலைக்கு தான் அனுமதி பெற்றுக் கொடுத்தமையை உறுதிப்படுத்தினால், தான் பாராளுமன்றத்துக்கு தெரிவான பின்னரும் அரசியலிலிருந்து விலகுவேன். போலிப் பிரசாரத்துக்கு எதிராக மக்கள் விழிப்படையவேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரி வித்துள்ளாரே. அவர் இவ்வளவு உறுதியாக சொல்வதிலி ருந்து, அவர் அப்படியொரு அனுமதியையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்றே தெரிகின்றது. அப்படியிருந்தும், அவரது அரசியல் எதிரிகள் தொடர்ந்து அந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனரே?

**வியுக்தியார்:** அவர் மீது வேறு எந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியவில்லை என்பதால் தான் அப்படி ஒரு குற்றச்சாட்டை முன்வைக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் அதுவல்ல இன்று அவர் எதிர்நோக்கும் பிரச்சினை. அவர் வெற்றிபெற்றாலும், அவர் மீது ஏற்கனவே விசப்பட்ட கத்தி அவரை குறி பார்த்து நின்றுகொண்டுதான் இருக்கின்றது. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்ததற்காக அவர் மீது ஒழுக்காற்று விசாரணை தொடங்கிவிட்டது. அந்த விசாரணையில் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர் எம்.பி. பதவியையும் இழக்க வேண்டி வரலாம். அவர் மதுபானச் சாலைக்கு அனுமதி எடுத்துக்கொடுத்தாரா இல்லையா என்பது அல்ல, இதுவே அவரை துரத்தும் பிரதான பிரச்சினை. அதுசரி, தான் மதுபானச் சாலைக்கு அனுமதி எடுத்துக்கொடுத்ததை உறுதிப்படுத்தினால், எம்.பி. பதவியையும் விட்டு விலகுவேன் என்று அவர் சொன்னதை சீரியசாக எடுத்துவிட்டீர்கள் போலல்லவா இருக்கின்றது. அப்படி சவால் விடுவது நமது அரசியல்வாதிகளுக்கு புதியதல்லவே. ஏற்கனவே இதுபோல சவால்விட்டவர்கள் இப்போதும் அரசியலில் இருக்கிறார்கள் தானே?

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** பாராளுமன்றத் தேர்தலில் 8 ஆயிரத்து 888 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் ஆயிரத்துக்கும் குறைவான வேட்பாளர்களே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளாரே. இது அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் கூறியிருக்கிறார், இது மக்களுக்கு அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை காண்பிக்கின்றதா?.

**வியுக்தியார்:** பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ள பலர், அதற்காக பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை என்பது உண்மைதான். அதற்காக மக்களுக்கு அரசியல் ஈடுபாடு குறைந்துள்ளது என்று நினைப்பது சரியானதுதானா என்பது தெரியவில்லை. அப்படி மக்களுக்கு அரசியலில் ஈடுபாடு குறைந்திருந்தால், தெற்கில் அவர்களால் இப்படியொரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கமுடியாதே. வேட்பாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபடாததற்கு வேறு காரணங்கள் இருப்பதாகவே தெரிகின்றது. சிலர் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தாலே, தாங்கள் எம்.பி. ஆகிவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. எனக்கு தெரிந்த ஊடகவியலாளர் ஒருவரும் வேட்புமனு தாக்கல் செய்தார். பிரச்சாரம் எதுவும் செய்ததாக தெரியவில்லை. ஆனால் அவரோடு பேசியபோது, ஒரு எம்.பியோடு பேசுவதுபோல இருந்தது அவரது பேச்சு. தன்னை ஒரு எம்.பி.யாகவே அவர் நினைத்துக்கொண்டிருப்பதை உணரமுடிந்தது. அதைவிட கொடுமையானது, ஒரு இளைஞர் சொன்னார், தான் தேர்தலில் கேட்பது, வெளிநாட்டில் இருக்கும் தனது நண்பர் ஒருவர், அப்படி கேட்குமாறும், பின்னர் அந்த நாட்டிற்கு வந்து அகதி அந்தஸ்து கேட்பதற்கு அது உதவும் என்றும் சொன்னாராம். அதற்காகவே தான் கேட்பதாக. இப்போது புரிகின்றதா ஏன் இவர்கள் எல்லாம் பிரச்சாரம் செய்யவில்லை என்று?.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

கேள்வி: கடந்த காலத்தில், அரசாங்கத்துடன் செயற்பட்ட அனைவரும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், வடக்கு கிழக்கு மக்களின் அறுதிப்பெரும்பான்மை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைக்க வேண்டும் எனவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** கடந்த காலத்தில் அரசாங்கத்துடன் செயல்பட்டவர்கள் என்று அவர் யாரைச் சொல்கிறார் என்று தெரியவில்லை. டக்ளஸ், பிள்ளையான், அங்கஜன் போன்றவர்களைச் சொல்கிறாரே தெரிய வில்லை. அல்லது அடுத்த அரசாங்கத்தில் செயல்படப் போவதாக சொல்பவர்களை நிராகரிக்கச் சொல்வதற்கு பதிலாக இப்படி சொன்னாரோ தெரியவில்லை. அதுவல்ல நாம் கவனிக்க வேண்டியது. அவர் வடக்கு கிழக்கில் மக்கள் அறுதிப்பெரும்பான்மையை தமது கட்சிக்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்றிருக்கிறார். அதுகும் அவர் தமிழ் மக்களைத்தான் குறிப்பிடுகின்றார் என்று நினைக்கின்றேன். வடக்கு கிழக்கில் தெரிவுசெய்யப்படும் எம்.பி.க்களில் அறுதிப்பெரும்பான்மை என்று அவர் சொல்வது பத்து எம்.பி.க்களை என்று நினைக்கின்றேன். அதற்கு அவர், யாழ்ப்பாணத்திற்கு வெளியேயும் அரசியல் அல்லவா செய்யவேண்டும்.?

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தமது ஆட்சியில் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று அரசாங்க பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** அதில் என்ன ஆச்சரிப்படுவதற்கு இருக்கின்றது? அவர்கள் தான் தெளிவாக, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தயாரிக்கப்பட்ட 'எக்க ராஜ்ய' அரசியல் வரைபைத்தானே நிறைவு செய்வதாக ஏற்கனவே கூறியிருந்தார்கள். அதுதான் ஒற்றையாட்சி என்பது தெளிவாக தெரிந்ததுதானே. நல்லாட்சி காலத்தில் ஐநா தீர்மானம் குறித்தும் நாமும் சேர்ந்துதானே அரசோடு ஐநாவில் அரசாங்கத்தை காப்பாற்றினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால்ட் டிரம்ப்பின் வெற்றியால் உக்ரைன் - காசா போரில் மாற்றம்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்க அதிபர் தேர்தலின் பின்னர் உக்ரைன், காசா போரின் நிலமைகள் மாற்றமடையும் என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

மத்திய கிழக்கில் அமெரிக்கர்களின் ஒரே நம்பகமான கூட்டாளி இஸ்ரேல் தான். எனவே அமெரிக்கர்கள் தங்கள் நீண்டகால ஆற்றல் நலன்களைப் பாதுகாக்க இஸ்ரேலை ஒரு பாரிய இராணுவ தளமாகவும் பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியினரோ அல்லது குடியரசுக் கட்சியினரோ எவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இந்தப் புவிசார் அரசியல் உண்மை மாறாது. மேலும் உயர் மட்டத்தில் உள்ள அமெரிக்க பாதுகாப்பு அவை இதைப் புரிந்து கொண்டே புவிசார் அரசியலை வரையறை செய்கின்றனர்.

டொனால்ட் டிரம்ப் அதிபரான பின்னர் இந்த இரண்டு போர்கள் தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம் வருமா என்ற எதிர்பார்ப்பு பாரியளவில் உள்ளது.

**இஸ்ரேல்- அமெரிக்க உறவு:**

இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் ஆதரவு எப்போதும் அசைக்க முடியாதது. இஸ்ரேலிய அரசியல் பரப்புரையாளர்கள் அமெரிக்க அரசாங்கத்தின் ஒவ்வொரு மட்டத்தையும் எப்படி கட்டுப்படுத்தி வைத்துள்ளனர் என்பதைப் பற்றிய பல தகவல்கள் அறியப்பட்டதே.

பெரும் வல்லரசுகளுக்கு மத்திய கிழக்கு எப்போதும் முக்கியமானது. உலகின் பெரும்பாலான எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்கள் அங்கு தான் அமைந்துள்ளன.

வளைகுடாவின் செல்வந்த ஆட்சியாளர்கள் தங்கள் வளங்களை அமெரிக்கர்கள் பெற மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவளிக்கின்றனர். இந்த நாடுகளை ஜனநாயக நாடுகளாக மாற்ற முடியாது.

இந்த வளைகுடா அரசுகள் நம்பகமான பங்காளிகளாக அமெரிக்கர்களுக்கு உள்ளனர். ஆயினும் சவுதி பல ஆண்டுகளாக அமெரிக்க ஆதரவாக இருந்தும்,



9-11 தற்கொலை குண்டுதாரிகளில் பெரும்பாலானவர்கள் சவுதி அரேபியாவிலிருந்து வந்தவர்களாவர்.

இதனாலேயே மத்திய கிழக்கில் அமெரிக்கர்களின் ஒரே நம்பகமான கூட்டாளி இஸ்ரேல் தான். எனவே அமெரிக்கர்கள் தங்கள் நீண்டகால ஆற்றல் நலன்களைப் பாதுகாக்க இஸ்ரேலை ஒரு பாரிய இராணுவ தளமாகவும் பயன்படுத்துகின்றனர்.

டிரம்ப் தனது இஸ்ரேலுக்கான ஆதரவில் அதிகளவு ஆக்ரோஷமாக இருக்க முடியும். ஆனால் கமலா ஹாரிஸ் இஸ்ரேலை எந்த வகையிலும் அச்சுறுத்த அனுமதிக்க மாட்டார் என்பதும் உண்மையாகும்.

**உக்ரைன் போரின் நிலை:**

உக்ரைன் போர் அமெரிக்காவிற்கு மிகவும் சிக்கலானது. உக்ரேனில் அமெரிக்காவின் நலன்கள் மிகவும் மறைமுகமானவையாக இருப்பினும் ஆனால் முக்கியமானதாகும்.

ரஷ்யாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடுகள் ரஷ்யாவை தொடர்ந்தும் அதிகம் அஞ்சுகின்றன. பின்லாந்து, பால்டிக் நாடுகள் மற்றும் போலந்து ஆகியவை இதில் அடங்கும்.

இந்த நாடுகள் நேட்டோவில் மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியத்திலும் உறுப்பினர்களாக உள்ளன. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன்கள் ரஷ்யாவால் நேரடியாக அச்சுறுத்தப்படுகின்றன என கருதுகின்றனர்.

அமெரிக்கா நேட்டோவின் மிக முக்கியமான உறுப்பினராகும். ஐரோப்பிய ஒன்றியம் பெரும்பாலும் அமெரிக்கர்களுடன் நட்பாக இருக்கும் ஜனநாயக நாடுகளால் ஆனது. உக்ரைனின் பெரும்பாலான பாதுகாப்புக்கு ஐரோப்பிய ஒன்றியம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதும், அது அமெரிக்காவிற்கு மட்டும் அல்ல என்பதே டிரம்ப் அரசின் நிலைப்பாடாகும்.

ஆனால் ரஷ்யாவை ஐரோப்பியர்கள் எதிர்த்துப் போரிடுகிறார்கள். உக்ரைன் வீழ்ந்தால், நேட்டோ நாடுகள் ஆபத்துக்கு உள்ளாகும். அப்படி நிகழ்ந்தால் மேலும் அமெரிக்காவிற்கு செலவுகள் இன்னும் அதிகமாக இருக்கும். அப்படி நிகழ்ந்தால் டிரம்ப் ஐரோப்பியர்களை அதிக பணம் செலுத்துமாறு கேட்பார். ஆனால் அவர் உக்ரைனை முழுமையாக கைவிட அனுமதிக்க மாட்டார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவுடன் ஒரு இறுதி சமாதான ஒப்பந்தம் எப்படி இருக்கும் என்பதில் அவரின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பது தெளிவில்லை.

ரஷ்யாவின் முக்கியமான துறைமுகமான செவாஸ்டோபோல் காரணமாக கிரிமியா எப்போதும் அவசியமாகிறது. கிரிமியாவை புட்டின் ஒருபோதும் கைவிடமாட்டார். கிரிமியாவைப் பாதுகாக்க அசோவ் கடலையும் பாதுகாக்க வேண்டும். அத்துடன் ரஷ்யாவின் மேற்கில் மிகவும் பாதுகாப்பான இயற்கை எல்லை டினேப்பர் நதியாகும்.

ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனின் வரைபடத்தைப் பார்த்தால், ரஷ்யா பல்லாயிரக்கணக்கான வீரர்களை தியாகம் செய்த இடங்கள் இவை என்பதை காணலாம். எனவே, உக்ரைன் ரஷ்யாவின் கைப்பாவை ஆட்சியாக இல்லாவிட்டால், ரஷ்யா விரைவில் அல்லது பின்னர் இந்த இடங்களை மீண்டும் ஆக்கிரமிக்கும் என்ற ஐயமும் உள்ளது.

டினேப்பருக்கு கிழக்கே உக்ரைனின் பல பிராந்தியங்கள் தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆயினும் கிரிமியா மற்றும் அசோவ் கடல் ஆகியவை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க ரஷ்யா அனுமதிக்காது. இப்பிராந்தியங்களை உக்ரைன் - நேட்டோ இதனை மீட்டு, புடின் அதிக பதிலடி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார் கள்.



ஆயினும் இப்போரில் உண்மை என்னவென்றால், உக்ரைன் - நேட்டோ கொடுத்த விலையும் மிக அதிகமாக இருப்பதால், கூடிய விரைவில் பேச்சுவார்த்தை மேசைக்கு இருதரப்பும் வரு வது நல்லது. டிரம்ப் இந்த விஷயங்களை விரைவுபடுத்துவார் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# ட்ரம்ப் 2.0: உலகுக்கு உணர்த்தும் செய்தி!

நடந்து முடிந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்றிருப்பதன் மூலம் இரண்டாவது முறையாக அமெரிக்காவின் அதிபர் ஆகியிருக்கிறார், குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப். 2025 ஜனவரி 20இல் அதிகாரபூர்வமாக வெள்ளை மாளிகையில் டிரம்ப் குடியேறவிருக்கும் நிலையில், அவரது புதிய அரசின் செயல்பாடுகள் குறித்த எதிர்பார்ப்புகள் உலக அளவில் எழுந்திருக்கின்றன.

2016 தேர்தல் நிதியை முறைகேடாகக் கையாண்ட வழக்கில் குற்றவாளி என டிரம்ப் அறிவிக்கப்பட்டது, அவர் மீதான பிற வழக்குகள், 2020 அதிபர் தேர்தலில் கிடைத்த தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் அவரது ஆதரவாளர்கள் நடத்திய வன்முறை என ஏராளமான எதிர்மறை அம்சங்களையும் தாண்டி, இந்தத் தேர்தலில் ஏகோபித்த ஆதரவுடன் அவர் வென்றிருப்பது கவனத்துக்குரியது.

மக்களின் அன்றாட வாழ்வில் தாக்கம் செலுத்திய பணவீக்கம் முக்கியப் பிரச்சினையாக இத்தேர்தலில் எதிரொலித்திருக்கிறது. சட்டவிரோதக் குடியேற்றங்களால் குற்ற நிகழ்வுகளின் எண் ணிக்கை அதிகரித்திருப்பதாக டிரம்ப் முன்வைத்த குற்றச்சாட்டும் வாக்காளர்களிடையே எடுபட்டிருக்கிறது.




கருக்கலைப்பு உரிமை தொடர்பாக ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் முன்னெடுத்த பிரச்சாரம் கைகொடுக்கவில்லை. வழக்கமாக ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவளிக்கும் லத்தீன் அமெரிக்கக் குடியேறிகள், ஆசியாவைச் சேர்ந்த குடியேறிகள், கறுப்பின மக்கள் இந்த முறை கமலா ஹாரிஸுக்கு முழுமையான ஆதரவை அளிக்கவில்லை எனத் தெரிகிறது.

சீனாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 60 வீதம்ரி விதிக்கும் திட்டத்தில் டிரம்ப் இருக்கிறார். பிற நாடுகளின் இறக்குமதிப் பொருள்களுக்கும் 10 - 20 வீதம் வரி விதிக்கப்படும் எனத் தெரிகிறது. எனினும், இறக்குமதிப் பொருள்களுக்கு அதிக வரி விதிப்பது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உதவுமா என்பது விவாதத்துக்குரியது. எஃப்.பி.ஐ. நிதித் துறை ஆகியவை தனக்கு எதிராகச் செயல்படுவதாக விமர்சித்துவந்த டிரம்ப், அவற்றைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தக்கூடும்.

அதே வேளையில், டிரம்ப் ஆட்சியில் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதி நிலவும் என்றும் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பு பலம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் நடத்தப்படும் போர்களில் அமெரிக்கா பங்களிப்பதைக் கடுமையாக எதிர்க்கும் டிரம்ப், நேட்டோ போன்ற அமைப்புகளுக்கு நிதி அளிப்பதையும் விரும்பாதவர்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவரவிருப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். இஸ்ரேலுக்கு ஆதரவானவரான டிரம்ப், காஸா போரை முடிவுக்குக் கொண்டுவரும் முனைப்பை இதுவரை வெளிப்படுத்தவில்லை. ஈரானுடனான அணு ஒப்பந்தத்திலிருந்து 2018இல் டிரம்ப் அரசு வெளியேறிய நிலையில், அவர் மீண்டும் அதிபராவது ஈரானுக்குப் பதற்றத்தை அளிக்கக்கூடும்.

இந்தியப் பிரதமர் மோடியிடம் நெருங்கிய நட்பைப் பேணுபவர் டிரம்ப். இந்தப் பின்னணியில், காலிஸ்தான் ஆதரவாளர்கள் விவகாரத்தில் பைடன் அரசு இந்தியாவிடம் காட்டிய கடுமை, டிரம்ப் ஆட்சிக்காலத்தில் இருக்காது என்று நம்பப்படுகிறது. அதேவேளையில், டிரம்ப் ஆட்சியில் குடியேற்றச் சட்டங்களின் பிடி இறுகக்கூடும். ஹெச்.1பி விசாக்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்படலாம். து இந்தியக் குடியேறிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். அமெரிக்கத் தயாரிப்புகளுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாகப் பிரச்சாரங்களில் குற்றம்சாட்டிய டிரம்ப், அதேபோல இந்திய இறக்குமதிப் பொருள்களுக்கும் வரி விதிக்கப்படும் என எச்சரித்தது கவனத்துக்குரியது.

அமெரிக்காவின் மேலவை (செனட்), கீழவை ஆகியவற்றில் குடியரசுக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருக்கும் நிலையில், தனது குறிக்கோள்களைத் திட்டங்களாக நிறைவேற்றும் வாய்ப்பு டிரம்ப்புக்கு அதிகரித்துள்ளது. அதிபரின் அதிகார எல்லைகள் விஸ்தரிக்கப்படலாம், சிவில் உரிமைகளுக்குப் பின்னடைவு ஏற்படும் என்றெல்லாம் ஊகிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் தாண்டி, புதிய முகங்களுடன் தனது புதிய அரசைக் கட்டமைத்திருக்கும் டிரம்ப், உலக அளவில் செலுத்தப் போகும் தாக்கம் அவரது விமர்சகர்களின் அச்சங்களை உண்மையாக்கிவிடக் கூடாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொஹானிடம் மீட்கப்பட்ட கார் அவர் பயன்படுத்தியமை உறுதி!

கொழும்பு, நவ. 10

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு சொந்தமான இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆடம்பர காரை அவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தியமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தக் கார் அவரின் மனைவியின் மிரிஹானை இல்லத்திலிருந்து கைப்பற்றப்பட்டிருந்தது.

கண்டியில் சமீபத்தில் தற்கொலை செய்து கொண்ட தனது செயலாளரே அந்தக் காரை கொண்டு வந்தார் என தெரிவித்ததன் மூலம் லொஹான் ரத்வத்த விசாரணையை குழப்ப முயன்றார் என பொலிஸ் சட்டப்பிரிவின் தலைவர் பிரதி பொலிஸ்மா அதிபர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

எனினும், விசாரணைகளின்போது மீட்கப்பட்ட பல காணொலி ஆவணங்கள் ரத்வத்த அந்த காரை 2000ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்துவதை வெளிப்படுத்தியுள்ளன. மேலும், அந்த விசாரணையின்போது போலியான செசி இலக்கத்தை பயன்படுத்தியதும் தெரிய வந்துள்ளது.

(ஐ)

# இணையம் ஊடாக மோசடி 58 இலங்கையர்கள் கைது!

கொழும்பு, நவ.10

இணையம் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்ட 58 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - நாரஹேன்பிட்டி - கிருலப்பனையில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றிலிருந்து கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரும் இலங்கையர்களாவர்.

அண்மைநாட்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிலிருந்தும் இணைய மோசடி குற்றங்கள் தொடர்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதாகினர். இவ்வாறு கைதானவர்களில் பலர் இந்தியா, சீனா உட்பட பல நாடுகளை சேர்நதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 5,431 மில்லியன் டொலர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தது

கொழும்பு, நவ. 10

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் மாத்திரம் நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டுப் பணம் 5,431 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 ஒக்ரோபர் மாதத்தில், வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுப் பணம் 587.7 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

2023 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான 10 மாத காலத்துடன் ஒப்பிடுகையில் இது 11. 7வீத அதிகரிப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# பாராளுமன்றத் தேர்தலுக்காக 63,145 பொலிஸார் கடமையில்!

கொழும்பு, நவ. 10

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு 63 ஆயிரத்து 145 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்தத் தகவலை தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு 3 ஆயிரத்து 200 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், 12 ஆயிரத்து 227 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



மேலும், நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் 269 வீதி தடைகளை பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

(ஐ)





அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தப்பாட்டம் மற்றும் வீணைப் போட்டிகளில் யாழ். வயாவிளான் மத்திய கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

# நிஷாந்தவின் இல்லத்துக்கான தண்ணீர், மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, நவ. 10

மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இல்லத்தின் மின்சாரம், தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கடந்த ஜனவரி மாதம் நெடுஞ்சாலை விபத்தில் உயிரிழந்தார்.

அவர் உயிரிழக்க முன்னர், அரசாங்கம் வழங்கிய உத்தியோகபூர்வ இல்லத்தை மீள ஒப்படைக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இது தொடர்பில், சனத் நிஷாந்தவின் மனைவியான சாமரி பெரேராவுக்கும் பல தடவைகள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்று பொது நிர்வாக அமைச்சு கூறுகிறது.

இந்த நிலையில், அவர் அதற்கு பதிலளிக்கவில்லை. இதையடுத்து அந்த இல்லத்துக்கான தண்ணீர், மின்சார விநியோகம் என்பன துண்டிக்கப்பட்டன.

இதேவேளை, உத்தியோகபூர்வ இல்லத்துக்கான வீட்டு வாடகையையும் செலுத்தவில்லை. இதனால், அந்த வீட்டை உரிய முறையில் கையகப்படுத்த முடியாது என்றும் கூறப்பட்டது.

(ஐ)

# தமிழ் மக்களுக்கு அடுத்த....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தேசிய கூட்டமைப்பை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பலம் பொருந்திய அரசியல் இயக்கமாக கட்டியெழுப்புவதில் தங்களுக்கு இருந்த வரலாற்றுப் பொறுப்பை உணர முடியாதவர்களாக கட்சி அரசியல் நலன்களை மேம்படுத்துவதில் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்கள் தீர்க்கதரிசனமற்ற முறையில் செயற்பட்டதன் விளைவாகவே தமிழ் அரசியல் சமுதாயம் இன்று சிதறுப்பட்டுக் கிடக்கிறது.

தற்போது தமிழரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகிய மூன்று அணிகளையுமே வடக்கு, கிழக்கில் போட்டியிடும் முக்கியமான கட்சிகளாகும். மூன்று கட்சிகளுமே தங்களை குறைந்தது பத்து ஆசனங்களுடனாவது பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு தமிழ் மக்களிடம் கேட்கின்றன. இவற்றில் இரு மாகாணங்களிலும் பரந்தளவில் மக்கள் ஆதரவைக் கொண்டதாக இதுவரை தமிழரசு கட்சியே விளங்கிவந்தது.

அண்மைக்காலமாக நிலவிவரும் உள் முரண்பாடுகள் தமிழரசு கட்சிக்கு தமிழர்கள் மத்தியில் இருந்த ஆதரவை எந்தளவுக்கு பாதித்திருக்கின்றது என்பதை இந்த வாரத்தைய தேர்தல் நிச்சயம் வெளிக் காட்டும். இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்த பத்து ஆச னங்களில் ஆறு ஆசனங்கள் தமிழரசு கட்சிக்குரியவை. இந்த தடவை அந்த ஆறு ஆசனங்களையாவது அந்த கட்சியி னால் காப்பாற்றக் கூடியதாக இருக்குமா என்பது முக்கியமான கேள்வி.

உட்கட்சி முரண்பாடுகளை தேர்தல் காலத்தில் வெளிக்காட்டாமல் இருக்க வேண்டும் என்ற குறைந்தபட்ச அரசியல் பக்குவமோ, சாதுரியமோ கூட இல்லாதவர்களாக தமிழரசு கட்சியின் சில தலைவர்கள் நடந்து கொள்கிறார்கள். அதே வேளை ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களில் தமிழரசு கட்சியை தாக்கிப் பேசுகிறார்களோ இல்லையோ அதன் பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரனுக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுப்பதில் தீவிரமாக இருக்கிறார்கள்.

அண்மைக்காலத்தில் சுமந்திரனைப் போன்று வேறு எந்தவொரு தமிழ் அரசியல்வாதியும் இந்தளவு விமர்சனங்களுக்கு உள்ளாகியதில்லை எனலாம். இந்த தேர்தலுடன் அவரது அரசியலுக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்று அவர்கள் கங்கணம் கட்டிநிற்கிறார்கள். காரணத்தைக் கேட்டால் சுமந்திரனால் தமிழ்த் தேசியத்துக்கு ஆபத்து என்கிறார்கள். தாங்கள் எல்லோரும் குடாநாட்டுக் "குண்டுச் சட்டிக்குள்" இருந்துகொண்டு அவ்வப்போது மக்களை உணர்சிவசப்படுத்தும் பேச்சுக்கள் மற்றும் கற்பனாவாத சுலோகங்கள் மூலமாக தமிழ்த் தேசியத்தை பாதுகாத்து வருவதாக அவர்களின் நினைப்பு.

சுயேச்சைக் குழு ஒன்றை அமைத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் வைத்தியர் ஒருவரும் கூட தமிழ்த் தேசியத்தின் பேரில் தான் வாக்குக் கேட்கிறார். அவருக்கு கணிசமானளவு மக்கள் வாக்களித்து விடுவார்களோ என்று தமிழ் அரசியல்வாதிகளே பயப்படுகிறார்கள்.. பாவம் தமிழ்த் தேசியம்.

இத்தகைய சூழ்நிலையில், குறைந்தது ஒரு பத்து ஆசனங்களுடனாவது எந்த கட்சியையும் தங்களது பிரதான அரசியல் அணியாக பாராளுமன்றத்துக்கு அனுப்பக்கூடியதாக தமிழர்கள் வாக்களிப்பார்களா என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

இதனிடையே, ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவின் வெற்றியை அடுத்து ஒரு மாற்றத்துக்காக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதில் ஓரளவுக்கு நாட்டம் காட்டுவதாக தமிழ் அரசியல்வாதிகளே கூறுகிறார்கள். அதற்கு தமிமிழ்க்கட்சிகளின் இதுகாலவரையான செயற்பாடுகள் மீதான மக்களின் வெறுப்பைத் தவிர, வேறு என்ன காரணம் இருக்கமுடியும்?

தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றத்துக்கு மத்தியில் அடுத்த பாராளுமன்றத்தில் உறுதியான தமிழ்ப் பிரதிநிதித்துவம் இருக்கவேண் டிய வெகுவாக உணரப்படுகின்ற போதிலும், சிதறுப்பட்டுக் கிடக்கும் தமிழ் அரசியல் சமுதாயம் அதற்கான வாய்ப்புக்கு இடையூறாக அமையக் கூடும் என்ற அஞ்ச வேண்டியிருக்கிறது. அத்துடன் வடக்கில் தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை யும் இருக்கிறது. மக்கள் நிதானமாகச் சிந்தித்து செயற்படக்கூடியதாக எமது அரசியல்வாதிகள் நடந்துகொள்ளவில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்வெட்டியால்...

தப்பிச்சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(எ)

## சசிகலாவுக்கு...

குறிப்பாக சசிகலா ராவிராஜின் தொகுதியான சாவகச்சேரியில் நேற்றைய தினம் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில் திட்டமிட்டு குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாகவும் அவருக்கு ஆதரவான வாக்குகளை திசைதிருப்பும் நோக்குடனும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று சசிகலாவின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான அவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டமையால் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

## தமிழ்தேசிய...

அத்துடன், ஒற்றையாட்சிக்கு உட்பட்டு 13ஆம் திருத்தத்துக்குள்ளும் தீர்வு தேடுவோரையும் இன அழிப்பு நடைபெறவில்லை என்றும் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறும் அரச ஒத்தோடிகளான வேட்பாளர்களையும் அவர்களின் கட்சிகளையும் நிராகரிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்ட நீண்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

தமிழ் மக்கள் இம்முறை முன்னரெப் போதையும்விட கவனமாகச் செயல்பட வேண்டியுள்ளது. தேர்தலில் போட்டியிடுகின்றவர்களுள் தமிழ்த் தேசிய அபிலாசைகளைக் கட்சி கொள்கைகளாகக் கொண்ட, மறைமுகமாகவேனும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிராத, சிங்கள அரசின் கைக்கூலிகளாக இயங்கிக் கொண்டிராத, மக்களுக்கு கூறுவது போல தமிழ்த் தேசியக் கொள்கையில் உறுதியாக உள்ள கட்சிகள் சிலவே உள்ளன.

சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் தேர்தல் வந்தால் மட்டுமே தமிழ்த் தேசியத்தைப் பற்றிப் பேசுவர். தேர்தல் மேடைகளில் மட்டும் சமஷ்டியே தீர்வு, தமிழ் மக்களுக்கெதிராக இன அழிப்பு நடைபெறுகிறது, சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறுவர். பின்னர் கதிரைகள் கிடைத்ததும் வேடங்களை கலைத்து ஒற்றையாட்சிக்கு உட்பட்டும் 13ஆம் திருத்தத்துக்குள்ளும் தீர்வைத் தேடுபவர்களாகவும், இன அழிப்பு நடைபெறவில்லை என்றும் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும் ஒற்றையாட்சிக்கான ஒத்தகருத்து சொல்லுக்கு புது வியாக்கியானம் அளித்தும் அரச ஒத்தோடிகளாக மாறுவர். இத்தகைய வேட்பாளர்களும் அவர்களின் கட்சிகளும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆகவே, தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான தெரிவை அனுபவ அறிவினூடாக செய்யும்போது போட்டியிலுள்ள மிகச் சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலுக்கும் அபிலாசைகளுக்கும் எப்போதும் விசுவாசமாக செயல்படுபவர்களாக இருப்பர்.

ஆகவே, தமிழ்த் தேசிய அரசியல் கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகாது தடுமாற்றமேதுமின்றி தொடர்ந்து உயரிய உறுதியுடன் நிற்கும் கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும் எனத் தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம் எமது மக்களை கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## சுற்றுலாத்துறை...

சுற்றுலாத் துறை மூலம் இலங்கை 185.6 மில்லியன் டொலரை ஈட்டியது.

இதன்படி இவ்வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான 10 மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் ஈட்டிய மொத்தத் தொகை 2533.7 மில்லியன் டொலராகும்.

இதேவேளை, கடந்த வருடத்தின் (2023) முதல் 10 மாதங்களில் 1593.4 மில்லியன் டொலர் சுற்றுலா வருமானத்துடன் ஒப்பிடுகையில் இது 59 வீத வளர்ச்சியாகும்.

இந்த பின்னணியில், 2024 நவம்பர் மாதம் முதல் 5 நாட்களில் மாத்திரம் 30, 620 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2024 இல் இதுவரை 1,651,335 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள னர்.

நவம்பர் முதல் 5 நாட்களில், இந்தியாவிலிருந்து அதிக பட்சமாக 7,785 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளனர். அதன் எண்ணிக்கை 4,488 ஆகும்.

இதன் பின்னர் ஜேர்மனி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (எ)

## அறுகம்குடாவில்...

காவல்படையே இந்தத் திட்டத்தை ஒப்படைத்திருந்தது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 23ஆம் திகதி அமெரிக்க - இஸ்ரேல் அரசாங்கங்கள் அறுகம்குடாவில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்துள்ளதாக எச்சரித்திருந்தது.

இதன் பின்னர் அரசாங்கம் இது தொடர்பில் மூவரை கைது செய்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சிசி- 2. (தாக்குதல்தாரிகள் பயன்படுத்திய இரகசிய அடையாளம்)

அமெரிக்க - இஸ்ரேலிய அதிகாரிகள் பொதுவான பயண எச்சரிக்கையை வெளியிட்ட பின்னர் சிசி - 2 இலங்கையில் கைதானார். இதன் பின்னர் ஒக்ரோபர் 28 ஆம் திகதி சகேரி தான் சிசி -2விடம் இலங்கைக்கான இஸ்ரேலிய துணைத் தூதரகத்தை கண்காணிக்குமாறு உத்தரவிட்டதாக எவ். பி. ஐயிடம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை தானும் சிசி - 2 என்பவரும் சிறைத் தண்டனையை அனுபவித்து வந்ததாக அவர் கூறினார்.

இஸ்ரேலின் துணைத் தூதரகத்தை கண்காணித்து வேவுபார்த்து பெறப்பட்ட தகவல்களை ஈரானின் புரட்சிகர காவல்படையிடம் ஒப்படைத் ததாக பர்ஹாட் சகேரி (ஈரான் இராணுவத்தின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை சேர்ந்தவர்) எவ்.பி.ஐயிடம் தெரிவித்தார்.

இதன் பின்னர் ஈரானிய அதிகாரிகள் மற்றுமொரு இலக்கை அடையாளம் காணுமாறு சகேரியை கேட்டுக்கொண்டுள்ளனர். இதன் பின்னர் சகேரி சிசி - 2 விடம் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் அதிகமாக செல்லும் அறுகம்குடாவை வேவு பார்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பின்னர் அறுகம்குடாவில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள் வதற்குத் திட்டமிடுமாறு ஈரான் அதிகாரிகள் சகேரிக்கு உத்தரவிட்டுள்ளனர்.

சிசி - 2 இந்தத் தாக்குதலுக்காக ஏ. கே - 47 துப்பாக்கிகளையும் ஏனைய ஆயுதங்களையும் வழங்குவார் என திட்டமிடப்பட்டதாக சகேரி தெரிவித்துள்ளார். 51 வயது பர்ஹாட் சகேரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வெளியிட்டுள்ள அமெரிக்க நீதி திணைக்களம் இவர் ட்ரம்பை கொலை செய்வதற்கான திட்டத்தை வழங்கினார் என குறிப் பிட்டுள்ளது. பர்ஹாட் சகேரி இன்னமும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ள அமெரிக்கா அவர் ஈரானில் வசிக்கின்றார் என தெரிவித்துள்ளது.

ஈரான் இந்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது. (எ)

# அநுர அரசின் அறிவிப்பால் காத்திருக்கிறது ஆபத்து!

### பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 10

தற்போதைய பொருளாதார நிலைமையின் அடிப்படையில் வரி குறைப்பு அல்லது வரிச்சலுகை வழங்கினால் 2028 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 15 வீதம் என்ற நிலைக்கு அரச வருவாயை கொண்டு வருவது கடினம் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அடுத்த வருடம் முதல் வருமான வரி உள்ளிட்ட வரி வீதங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அநுர அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் பொருளாதார நிபுணர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை 2028 ஆம் ஆண்டு முதல் இலங்கை செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வரி வருவாய் மேலும் குறைந்தால் கடனை அடைப்பது சவாலாக இருக்கும்.

இதன்படி, அரசாங்கம் - சர்வதேச நாணய நிதியத்துக்கு இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாட்டின் அரச வருமானம் 2028 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சத வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# திரபோஷா நிறுவனத்தை மூடுவதற்கு அரசு தீர்மானம்!

### ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

திரிபோஷா நிறுவனத்தை மூடிவிட எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பில் அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். இது சிறுவர்களின் போசாக்கு தேவைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

திரிபோஷா நிறுவனத்தை மூடிவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரிபோஷா இந்த நாட்டில் நிறை குறைந்த சிறுவர்கள், கர்ப்பவதித் தாய்மார்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களின் போஷாக்கை கருத்தில்கொண்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் வேலைத்திட்டமாகும்.

போஷாக்கு என்ற அடிப்படையில் நாங்கள் திரிபோஷா மாத்திரமே கொடுத்து வருகிறோம். அதனை நிறுத்துவது எதிர்காலத்தில் பெரும் போஷாக்கு குறைபாட்டு பிரச்னைக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் வியாபாரிகள் சிலரே இந்த நிறுவனத்தை மூடிவிட ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருக்கவேண்டும். தற்போது இதனை மூடிவிட்டு சில காலங்களில் தனியாருக்கு விற்பனை செய்வது இவர்களின் திட்டமாக இருக்கலாம். இடதுசாரி கொள்கையுடைய ஜனாதிபதி ஒருவரின் ஆட்சியில், வறுமையில் இருக்கும் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் திரிபோஷா சத்துணவை நிறுத்த நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார். (ஐ)

# “முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை நீக்குவோம்!”

கொழும்பு, நவ. 10

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டத்தின் ஊடாக சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை மாற்றுவதற்குத் தாம் தயாராகவுள்ளார் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் வரையில் தற்போதைய அரசாங்கத்தை மாற்றியமைக்க முடியாது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் வழங்கப்படுகின்றன.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசமைப்பு மற்றும் சுற்றறிக்கை போன்றவற்றின் ஊடாக பல சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## நாசகார...

அரசாங்கத்தை வைத்திருந்த ஜனாதிபதி மாமாவிடமிருந்து மகனுக்கு அதிகாரத்தை எதிர்பார்த்தார். ஆனால், இந்த நாட்டு மக்கள் செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று ஊழல் மற்றும் நாசகார குடும்பங்கள் அனைத்தையும் தோற்கடித்து சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை மாற்றினர்.

அந்த ஊழல்வாதிகள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள் தங்களது வாழ்நாள் காலத்தில் இவ்வாறானதொரு சம்பவமொன்று நடக்கும் என்று, எவ்வாறாயினும் மீண்டும் அவர்களின் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நமது அரசின் மிக முக்கியமான திட்டம் கிராமப்புற மக்களின் வறுமை நிலையை ஒழிப்பதாகும். சிறந்த கல்வியையும் அறிவையும் அரசால் வழங்க முடியுமானால், அந்த குடும்பம் ஏழைக் குழந்தையைப் படிக்க வைத்து அவர்களின் வறுமையில் இருந்து மீண்டு வருவர். ஆனால், அந்தக் குடும்பம் ஏழ்மையானதாகவும், குழந்தை படிக்காமலும் இருந்தால் அந்தக் குடும்பம் ஏழ்மையானது, இது சுழற்சி வறுமையின் நெருக்கடியாகும்.

எனவே, கல்வியில் ஒரு பெரும் சீர்திருத்தத்தை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். இதன் மூலம் ஒவ்வொரு குழந்தையும் பாடசாலையை விட்டு வெளியேறும் வகையில் எதிர்காலத்துக்கான கல்வி அல்லது தொழில்முறை பாதையில் வரவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு வாக்களிக்காதவர்கள் இருந்தனர். சிலருக்கு சந்தேகம் இருந்தது. அவநம்பிக்கை ஏற்பட்டது - தயக்கம் இருந்தது. ஆனால், இப்போது எல்லாம் மாறிவிட்டது. தோழர்கள் என்று அழைக்கிறார்கள். அப்போது, எங்களுக்கு வாக்களிக்காதவர்கள்தான் தற்போது தேர்தல் பணியின் போது அதிகளவில் உதவுகிறார்கள்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## துப்பாக்கி சூடு ஒருவர் காயம்!

கொழும்பு தாமரை கோபுரத்துக்கு அருகில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் நேற்று முன் தினம் இரவு இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள் ளது. துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பொதுத்தேர்தல் தொடர்பில் 2348 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, நவ. 10

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்து 348 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 615 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 678 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 20 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## லொறி விபத்தில் ஐவர் படுகாயம்!

நுவரெலியா, நவ. 10


தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறி தடம் புரண்ட விபத்தில் ஐவர் காயமடைந்தனர்.

நுவரெலியா - களனி வெளி - பெருந்தோட்ட நிறுவனத்துக்குக் கீழ் இயங்கும் இஸ்கிராப் தோட்டத்தில் இருந்து தேயிலை தொழிற்சாலைக்கு கொழுந்து ஏற்றிச் சென்ற லொறியே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

காயமடைந்த ஐவரும் நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)
















இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 314 பக்கங்கள் : IV +16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையே எமது இனத்துக்கு பலம் சேர்க்கும்!

## இதுவரை 5 கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பு

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி


## தமிழர் தேசத்தின் ஒற்றுமையை விரும்பும் எமது மக்களின் தெரிவாக சங்கு இருக்கட்டும்!

**தமிழ் மக்களின் விருப்பறிந்து எதிர்காலத்தில் அனைவரும் ஓரணியில் திரள இது வழிவகுக்கட்டும்!**


**தமிழ்த் தேசிய அரசியலின் ஒற்றுமையை சிதைத்த கட்சியை இந்தத் தேர்தலில் நிராகரிப்போம்!**

**அதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களும் ஒற்றுமைப்பட வழிவகுப்போம்!**

## தமிழ்த் தேசிய சின்னம்









உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (DTNA)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தேர்தல் விஞ்ஞாபனம்

ஜனநாயகதமிழ்தேசியகூட்டணி என்பது தமிழ் ஈழவிடுதலைஇயக்கம் (TELO), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய போராட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து பயணிக்கும் ஓர் அரசியல் கூட்டமைப்பாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயரில், பல தமிழ் அமைப்பினரும் ஒன்றிணைந்து பலமான அரசியல் கட்டமைப்பாக, கடந்த 2001ஆம்ஆண்டிலிருந்து பயணித்து வந்தோம். ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பலமான ஜனநாயக கட்டமைப்புகளுடனான அரசியல் கட்சியாக உருவாக்குவதில் ஏற்பட்ட திட்டமிட்ட தடைகள் காரணமாகவும், கூட்டமைப்புக்குள் காணப்பட்ட எதேச் சதிகாரப் போக்குகள் காரணமாகவும் தமிழரசுக் கட்சியின் தவறான கொள்கை காரணமாகவும் வெவ்வேறு காலகட்டங்களில் சில கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தன.

இறுதியாக, 2023இல் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசுக்கட்சி தனது வீட்டு சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக தீர்மானித்து, அறிவித்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

பல்லாயிரக்கணக்கான தியாகங்களின் ஊடாக கட்டியெழுப்பப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் இயக்கமும், முக்காலத்திற்குமான தமிழ் மக்களின் உச்சபட்ச எதிர்பார்ப்பாகவுள்ள ஒற்றுமையும் ஒன்றுசேர சிதைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனும் உறுதியான தீர்மானத்தின் அடிப்படையில், தமிழ் தேசியப் பரப்பில் இயங்கிக்கொண்டிருக்கும் மேற்கண்ட கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாக பயணிப்பது எனவும் தீர்மானித்தோம். அக்கூட்டணிக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்று பெயரிடப்பட்டது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற பெயரில் உருவாக்கப்பட்ட சிவில் அமைப்புகளின் கூட்டும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பாக செயற்பட்டது. அந்த பொதுக்கட்டமைப்பானது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம்.

மிகக் குறுகிய கால அவகாசத்தில் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்குகளைப் பதிவு செய்து தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கைகளையும், அதற்கு அவசியமான ஒற்றுமையையும் சங்கு சின்னத்தின் ஊடாக உலகறியச் செய்தனர். இதனைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் சங்கு சின்னத்தில் தொடர்ந்து பயணிப்பதாக முடிவு செய்தோம்.

இன்று, தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில், தமிழர் தரப்பில் உள்ள ஒரே ஒரு கூட்டணியான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, சங்கு சின்னத்தில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் ஒற்றைப் பிரதிநிதித்துவத்தையாவது பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில், நாம் முழுமையான அர்ப்பணிப்புடன் தமிழரசுக்கட்சியுடன் பேச்சுக்களை நடாத்தினோம். திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்குச் சின்னத்திலும் ஒற்றுமையாக வேட்பாளர்களை நிறுத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் தலைமை உறுப்பினர்கள் தமது இணக்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர். அதற்கிணங்க, திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து வேட்புமனுவை தாக்கல் செய்ய முடிந்தது. ஆனால் தமிழரசுக் கட்சியானது தனது சுயநலமான போக்கின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது. இதன் காரணமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தனித்துப் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டது.

தென்னிலங்கையில் தமிழர்கள் அதிகமாக வாழும் கொழும்பு மாவட்டத்தில், எமது கூட்டணியில் இணைந்து போட்டியிட பலர் விருப்பம் தெரிவித்திருந்த போதிலும் அங்கு போட்டியிடுவதை நாம் தவிர்த்திருந்தோம். யுத்த காலங்களில் மட்டுமல்லாது அதற்குப் பின்னரும் எமது மக்களின் அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளில் நாடாளுமன்றிலும் அதற்கு வெளியேயும் எம்மோடு தோளோடு தோள் நின்று குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளை பலவீனப்படுத்துகின்ற எத்தகைய செயற்பாடுகளிலும் நாம் ஈடுபடலாகாது எனும் தெளிவான, உறுதியான சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டிருந்தோம்.

தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு வழிமுறைகளில் தனது விடுதலைக்காகப் போராடி வருகிறது. தமிழர்களாகிய நாம் இலங்கைத்தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பல ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபுவழியான வாழ்விடத்தை தாயகமாகக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசமாக வாழுகின்றோம்.

ஆனாலும், இலங்கைத் தீவானது பல இன, பல மத, பல மொழி, கலாசாரங்களைக் கொண்ட ஒரு தீவு என்பதை உணர்ந்து இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே தேசிய இனப்பிரச்சினை தோற்றம்பெறுவதற்கும் அது கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும்.

தமிழ் மக்களுடைய இருப்பை அழிக்கும் தொடர்ச்சியான செயற்பாடுகளே இன அழிப்பு நடவடிக்கையாகும். தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள். அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவிவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக்கொடிய விளைவே இறுதிப்போரில் நிகழ்ந்த உச்சமான இனஅழிப்பாகும்.

இதன் அடிப்படையிலேயே, உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம், இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றது இனஅழிப்பு என்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது. எமது வடக்கு மாகாணசபையும் நடைபெற்றது இனஅழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உள்ளூராட்சி அமைப்புகளாலும் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன. அதிகம் பாதிக்கப்பட்டுள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26 க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைப்பதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறியே நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையில் ஒருபுறத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் வேகமாக நடந்து வருகிறது. இன்னொரு புறத்தில் நிலப்பறிப்பு தொடர்கிறது. 3000ற்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் உள்ள மேய்ச்சல்தரைகளை அரச அனுசரணையோடும், பாதுகாப்போடும் வெளிமாவட்ட சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேசங்களில் பிரதேசமக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினையும் பாதிக்கும் கனிமவள அகழ்வுகளும் சட்ட விரோத இறால் பண்ணைகளும் மக்களின் எதிர்ப்பை மீறியே முன்னெடுக்கப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒருபிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு அங்குள்ள தமிழ் மக்கள் நான்கு தசாப்தங்களாக தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. மாறாக அங்குள்ள சிறுபான்மையின மக்களை மாறிமாறி ஏமாற்றி இனப்பகைமையினை மேலும்மேலும் வளர்க்கும் கைங்கரியத்தையே செய்துவருகின்றன.

வடக்கு மாகாணத்தின் வன்னி மாவட்டங்களில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரசபடையினரும் இணைந்து பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகளை உதாசீனம் செய்தே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அவ்வாறான நிலைக்கு வெட்கப் படவேண்டிய, வருத்தப் படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100இற்கும் மேற்பட்ட படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான்குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் கிராமம் இராணுவத்தின் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோகஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு, மிகக் குறுகிய காலத்துக்குள் 5000ற்கும் அதிகமான தென்னிலங்கை மக்கள் அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்டதுடன் வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பல் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. குடியேற்றக் கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் அரச தரப்பினரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் கனிமவளங்கள் பறிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலுக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பேசாலை, விடத்தல் தீவு, தள்ளாடி, பூநகரி பிரதேசங்களில், பொருளாதார அபிவிருத்தியின் பேரால் மக்களின் எதிர்ப்பைமீறி அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன. முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வகுடிகளான தமிழ்மக்களை அங்கு முழுமையாக மீளக்குடியமரவிடாமல் தடுத்துவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் விளைநிலங்களிலும், கரையோரத்திலும் படைத்தரப்பு தனது முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. யாழ்மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன. நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்தர்கள் எவரும் இல்லாத தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

தமிழர் தாயகப் பிரதேசத்தின், குறிப்பாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுக்குரிய கடல்வளம் அழிக்கப் படுகின்றது. அவர்களது வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. இந்திய இழுவைப் படகுகளாலும், உள்ளூர் இழுவை மடித்தொழிலாலும், தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்புகளாலும், சட்டவிரோதமான மீன்பிடிமுறைகளாலும், மீனவக் கிராமங்களில் படைத்தரப்புகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளாலும் கடல் மீதான உரிமையை இழந்தும், கடல் வளங்களை இழந்தும், தமது வாழ்வாதாரங்களை இழந்தும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் 46,000 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் தாயகமெங்கும், தமிழர்களையும் அவர்களது மண்ணையும் வளங்களையும் கூறுபோடும் வகையில், வன வளத் திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் கனிம வளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களும், அரசின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் அடங்காத மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து, காடுகளின் பாதுகாப்பு, வன உயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச் செய்கை நிலங்கள், வணக்கத் தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் அளவு நிலங்களை அபகரித்து வைத்துள்ளன. (III பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(II ஆம் பக்க தொடர்ச்சி)

யுத்தம் முடிவடைந்த நிலையிலும்கூட சிறைகளில் மிக நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதைக் காணமுடிகிறது. தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும், பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்கு மத்தியிலும், உச்ச அளவில் பயன்படுத்தப் பட்டுவருகின்றது. யுத்தம் முடிந்ததும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 15 ஆண்டுகளின் பின்னரும் அச்சுறுத்தல்களின் மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள். மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்துவருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்ட உறவினர்கள் மற்றும் அரசியற் செயற்பாட்டாளர்கள் மீது அரச பயங்கரவாதமானது போலீஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவிவிடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறான நடவடிக்கைகள் யாவும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஶ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை. தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச்செய்கின்றன. பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது. வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் வெவ்வேறு வடிவங்களாகவே அமைகின்றன.

சுருக்கமாக சொல்வதெனில், யுத்தம் முடிவடைந்த பின்னரான கடந்த 15 வருட காலத்தை இன நல்லிணக்கத்துக்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக, தமிழர் சமூகத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் நிலப்பறிப்புக்கும் சிங்கள பௌத்தமயமாக்கலுக்குமே அரசு பயன்படுத்தி வந்துள்ளதோடு, அதனை ஒவ்வொரு அரசாங்கங்களும் தமது கொள்கையாக முன்னெடுத்து வந்துள்ளன.

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை, நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை மட்டும்தான் இருக்கிறது என்ற பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க சிங்கள பௌத்த அரசாங்கங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண மறுத்து இனஅழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு வங்குரோத்தாகியது. இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காக வாங்கிய கடன்சுமைதான் என்பதை தென்னிலங்கையும் அதனைத் தாங்கிப் பிடிக்கின்ற சர்வதேச சக்திகளும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையின் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும், பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மூடிமறைக்க முயல்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்தவொரு அரசாங்கமும் அதன் உறுப்பினர்களும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

யுத்த தளபாடங்களுக்காக, முன்பிருந்த அரசாங்கங்கள் 25000 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின்அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. அந்த அழிவுகளில் இருந்து தமிழ்மக்களை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு செயல்திட்டமும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் எண்ணிக்கை பல இலட்சங்களாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் நாற்பது வீதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது. இலங்கைத் தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதியளவு படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பிடத் தக்களவு குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை. மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்தமயப்படுத்தும் நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுவதற்காக படைத்தரப்பு பெருஞ்செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவப் பொருளாதாரச் சூழலுக்குள் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்படமாட்டார்கள். தற்போதைய காலங்களிலும் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வருகிறார்கள். தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள், சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்களாவர். இவ்வாறாக தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வியலில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இப்பொழுது புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸநாயக அவர்களும் தேசிய மக்கள் சக்தி என்ற அவரது கட்சியும் இலங்கையில் ஊழலும் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம்தான் இருக்கிறது வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை என்ற பொய்யான பிம்பத்தைக் காட்டவே முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியமாகும்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டும்தான் உண்டு என்று ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக கூறிவரும் ஒருபின்னணியில், தேசிய இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினராகிய நாம் ஒற்றுமையுடன், எம்மக்களின் இன நலன்களைப் பேணும் நோக்குடன், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு தாயகம் எங்கும் தகுதியான வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களில் ஒருபிரிவினர் ஏதாவது ஒரு தென்னிலங்கை கட்சியின் தமிழ் வேட்பாளருக்கு அல்லது சகோதர இனவேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும்சரி தோற்றவர்களும்சரி இன்றுவரையிலும் இனப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒருதீர்வைத் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஊடாக தரவும் இல்லை. இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவுமில்லை.

எமது கூட்டணியில், நாம் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவோம். அதேசமயம், இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய தமிழ் மக்களின் உறுதியான கோரிக்கையை சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவோம். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவோம்.

இந்த அடிப்படையில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி இனப் பிரச்சனைக்கான நிரந்தரதீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

01) இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத் தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

02) தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பானது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில், அதாவது புதிய யாப்பானது இலங்கைத்தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் (Plurinational State) கட்டமைக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

03) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ஒன்றிணைத்ததாக அமையவேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் வாழும் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எப்போதும் தயாராக உள்ளது.

04) மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படவேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கும் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் கோரிக்கைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

05) ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக் கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகாரநீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்யவேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக, ஐநா பொதுச்செயலரின் பொறுப்புகூறலை ஐநா பொதுச்சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும்.

06) அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இனஅழிப்பின் ஒருபகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

07) எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான வகையில், 2016ஆம் ஆண்டில் இலங்கை இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கமற்றும் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்துதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்குதல், மீனவக் கிராமங்களிலிருந்து படைத்தரப்பினர் வெளியேறுதல போன்ற நடவடிக்கைகள் மூலம் அம்மக்களின் பாதுகாப்பும் வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப் படவேண்டும்.

08) ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று (Protective Mechanism) உருவாக்கப்படவேண்டும்.

மேற்கூறப்பட்ட, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ்மக்களும் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிக்காட்ட சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டிநிற்கின்றோம்.

தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்தகுரலில் ஒலிக்கச் செய்வதற்காகவும், பலமான கட்டமைப்புடனான அரசியல் தீர்வை கோரவும், அதற்கான அழுத்தங்களை தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளூடாகவும் சர்வதேச சக்திகளூடாகவும் மேற்கொள்ளவும் இத்தேர்தலை ஒரு சந்தர்ப்பமாக எமது மக்கள் கையாளவேண்டும்.

சங்கு சின்னத்திற்கு வழங்கப்படும் வாக்குகள், தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்கள் வழங்கும் வாக்குகளாகவே அமையும்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக, தமிழ் மக்களின் தேசியக் கடமையாக சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய வாக்குகளை வழங்குவதன் மூலம் எங்கள் கோரிக்கைகளை நாங்களே வெற்றி பெறவைப்போம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

"அரசியல் நீதிகோரும் பயணத்தில்
முன்னாள் போராளிகளையும் இணைத்துக்கொள்வோம்.
அவர்களின் வெற்றியையும் உறுதி செய்வோம்"

- நிமால் விநாயகமூர்த்தி, புலம்பெயர் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் - கனடா





6

குண்டு மழையால் எமது உறவுகள்
மடிந்து வீழ்ந்த... நாங்கள் குருதியில்
தோய்ந்த... அந்த நாட்களை நாம்


**மறக்கலாமா?**


எங்கள் மண்ணை பிணக் காடாக மாற்றிய
தேசிய கட்சிகளுக்கா எமது வாக்குகள்...?

மற்றுமொரு கதிர்காமரை உருவாக்க
உங்கள் வாக்குகள் பயன்படுவதா?

போராளி
**க.யசோதினி**
(மலர்விழி - B.A) வன்னி மாவட்டம்

மக்களே... **சிந்தியுங்கள்...!**







9

7

போராளி
**சி.வேந்தன்**
யாழ். மாவட்டம்

போராளி
**க.துளசி**
வன்னி மாவட்டம்

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (DTNA)


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2024 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org